www.tamilarangam.net


ஜுன் 1995 June


# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION

இதழ் 53 Issue

'லான்டட்' பெற்ற அகதிகள் மீண்டும் இலங்கை செல்ல முடியுமா?

3








தேர்தல் வாக்குறுதிகளை முற்றாக நம்பமுடியாத நிலை இங்கும்!

5

பிள்ளைகளுக்கு அடிக்கலாமா? 911 காத்திருக்கிறது!

7 & 14



இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

A Monthly Information Digest

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

**Established**
February 1991

P.O. Box -3
Station 'F'
Toronto, On. M4Y 2L4

Phone: (416) 920-9250
Fax: (416) 757-7399

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto
&
Catholic Immigration Bureau, Scarborough Region

**Published by**
Thamil Information Research Unit (THIRU)
&
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editors**
Sasi Pathmanathan
V. Vivekananthan

**General Manager**
S.T. Singam

**Production Asst.**
N. Kumaradasan

**Circulation Assts.**
P. Balakumar
P. Sivasubramaniam

**Typesetting Layout & Design**
Ahilan Associates

**Technical Support**
Haran Graph &
V. L. Ananth

**Printers**
Ahilan Associates
(416) 920-9250

**PUBLISHED MONTHLY**
4000 Copies

## ஆசிரியரிடமிருந்து . . . . . . . . . . . . . FROM THE EDITOR

கனடாவில் எல்லோருக்கும் தெரிந்த, நன்கு பிரபல்யமான ஒரு பொதுச்சொல் எதுவாக இருக்கும் என நினைக்கிறீர்கள?

தற்போதைக்கு அது 'வெல்ஃபெயர்' என்று துணிந்து சொல்லலாம். சகல மொழி பேசும் மக்களுக்கும் இது ஒரு பொதுச் சொல்லாக அமைந்துவிட்டது.

வெல்ஃபெயர் என்றால் என்ன?

நலன்புரி என்பது அதன் நேரடி அர்த்தம். இங்கு, பொதுநல உதவி என்று அர்த்தப்பட, அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதியுதவி 'வெல்ஃபெயர்' என்று அழைக்கப்படுகின்றது.

இதனைப் பெறுபவர்கள் யார்?

வருமானம் இல்லாதவர்கள், போதிய வருமானம் பெறாதவர்கள், தொழில் அற்றவர்கள், வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள், முதியோர்கள் போன்றோர் அரசாங்கத்தினால் வழங்கப்படும் இந்த நிதியுதவியைப் பெறுகின்றனர்.

இந்த அடிப்படையில், கனடாவுக்குப் புதிதாகவரும் அகதிகள், தங்களுக்கு ஒரு வேலையைப் பெறும் வரை இந்த 'வெல்ஃபெயர்' உதவியைப் பெறுவது தவிர்க்க முடியாததாகவுள்ளது. ஆனால், ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் லிபரல், கன்ஷர்வேடிவ் கட்சியினர் நடத்தும் பிரசாரத்தினைப் பார்க்கையில், இந்த 'வெல்ஃபெயர்' எனப்படும் "பிச்சைக் காசைப்' பெறுவதற்காகவே அகதிகள் கனடா வருவது போன்றதாக அமைந்திருப்பது வேதனைக்குரியது.

'வெல்ஃபெயர்' பணம் மாகாண அரசுக்கு உட்பட்டது. கனடா வரும் அகதிகள் மற்றும் புதிய குடிவரவாளர்களில் அறுபது வீதமானவர்களும் ஒன்ராறியோ மாகாணத்தில் குடியேறுவதால் கணிசமான தொகை இதற்குச் செலவிடப்படுகின்றது. இந்தக் கொடுப்பனவுகளில் ஊழல், மோசடிகள் இடம்பெறவில்லை என்றும் கூறமுடியாது. அதற்காக, வெல்ஃபெயரிலேயே முழுத் தேர்தலையும் தங்கவைத்து எந்தவொரு கட்சியாவது வெற்றிபெற முனையுமானால், அது தனிமனிதனது அடிப்படைத் தேவையில் கைவைத்ததாக அமையும் ஆபத்தில் மாட்டிவிடும்.

ஒன்ராறியோவிலுள்ள மக்களில் பத்து வீதத்தினர் மட்டுமே வெல்ஃபெயர் பெறுகின்றார்கள் என்ற கணக்கினையும், இவர்களில் பெரும்பாலானவர்கள் கனடாவின் 'சொந்தக்காரார்' என்று தம்மை அழைத்துக் கொள்ளும் வெள்ளை நிறத்தவர்களே என்ற உண்மையையும் எவரும் மறந்துவிடக் கூடாது.

இவ்வாறான நிலையில், "வெல்ஃபெயருக்கு லட்சக்கணக்கான டாலர்கள் செவழிப்பதைக் கனடிய வரியிறுப்பாளர்கள் வெறுக்கிறார்கள்" என்றவாறு அரசியல்வாதிகள் பிதற்றுவதைப் பித்தலாட்டம் என்றே கூற விரும்புகின்றோம். புதிய குடிவரவாளர்களே பெருமளவு வரியிறுப்பாளர்களாகி இந்நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்றார்கள் என்ற உண்மையை அரசியல்வாதிகள் மறைத்து வருவது ஏன் என்று தெரியவில்லை.

வெல்ஃபெயரில் இருப்பவர்களை சும்மா இருந்து காலாட்டிக் கொண்டு பணம்பெறுவதைத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று கன்ஷர்வேடிவ் தலைவர் மைக் ஹரிஸ் தெரிவித்துள்ளார். தாங்கள் மாதாமாதம் பெறும் வெல்ஃபெயருக்காக கட்டாய பிள்ளை பராமரிப்பு, மரம் நடுதல், வீதிப் பராமரிப்பு, சமூக நிறுவனங்களில் கடமை போன்ற வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். ஏன் இவ்வளவு பிரச்சனை? இவ்வாறு செய்வதற்குப் பதிலாக, அவர்களது வெல்ஃபெயரை நிறுத்திவிட்டு, அந்தந்த வேலைகளையே சம்பளம் வழங்கும் வேலைகளாக அவர்களுக்கு வழங்கி விடலாமே!

லிபரல் கட்சியும் கன்ஷர்வேடிவ்வுக்குச் சளைத்தவர்களல்ல. சில மாதங்களுக்கு முன்னர் குயின்ஸ்பார்க் மாகாண சபையில் சோமாலியர்கள் பெறும் வெல்ஃபெயர் பற்றிக் கண்மூடித்தனமாகப் பேசி, அவர்களின் பகைமையையும் பகிரங்கமான எதிர்ப்பையும் சம்பாதித்தவர் லிபரல் தலைவர் லின் மக்லௌட். வெல்ஃபெயரில் பெரும் வெட்டு ஏற்படுத்துவது இவர்களின் கொள்கைகளில் ஒன்று.

வெல்ஃபெயரில் இருப்பவர்கள் எவரும் அதனை விரும்பிப் பெறவில்லை. வெல்ஃபெயர் பெறுவதற்கென்று எவரும் கனடா வரவுமில்லை. அரசாங்கங்கள் அவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்குமானால் அவர்கள் அடுத்த நிமிடமே வேலைக்குச் செல்லத் தயாராகவிருக்கிறார்கள் என்பதை அரசியல்வாதிகள் மறந்து விடுகின்றனர்.

ஆக மொத்தத்தில், வெல்ஃபெயரை மையமாக வைத்து தேர்தலுக்கான கட்டைகளை நகர்த்தும் பணியில் லிபரல், கன்ஷர்வேடிவ் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். மாமியார் மருமகள் சண்டை போன்று, வெல்ஃபெயரில் அதிகளவு வெட்டு ஏற்படுத்துவது யார் என்ற வகையில் இரு கட்சிகளும் தங்கள் பிரசாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றன.

ஒன்ராறியோவின் கடன் பளுவே இந்த வெல்ஃபெயரினால் தான் ஏற்பட்டது என்றவாறு மக்களை ஏமாற்ற முனைவது நேர்மையான அரசியலல்ல. ஒருவகையில், இதுவும்கூட இனத்துவேசம் என்பதை தலைவர்களுக்குப் புரியவைக்கவேண்டியது வாக்காளர் கடமை.

**எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

**ஸ்தாபிதம்**
பெப்ரவரி 1991

**முகவரி**
P.O. Box - 3
Station 'F'
Toronto, On. M4Y 2L4

**போன் :** (416) 920-9250
**பக்ஸ் :**(416) 757-7399

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம் - ரொறன்ரோ
&
கத்தோலிக்க குடிவரவு நிலையம் ஸ்காபரோ

**வெளியீடு**
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு
&
அகிலன் அசோஷியேற்ஸ்

**பிரதம ஆசிரியர்**
எஸ். (திரு) திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
ரஞ்சி திரு

**உதவி ஆசிரியர்கள்**
சசி பத்மநாதன்
வே. விவேகானந்தன்

**பொது முகாமையாளர்**
எஸ். ரி. சிங்கம்

**தயாரிப்பு உதவியாளர்**
என். குமாரதாஸன்

**விநியோக உதவியாளர்கள்**
ப. பாலகுமார்
ப. சிவசுப்பிரமணியம்

**ஒளி அச்சு வடிவமைப்பு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன் கிறாப் &
வி. எல். ஆனந்த்

**அச்சுப்பதிப்பு**
அகிலன் அசோஷியேற்ஸ்
(416) 920-9250

**மாதாந்த வெளியீடு**
4000 பிரதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அகதியாக வந்து 'லான்டட்' பெற்ற ஒருவர் சொந்த நாட்டுக்கு பயணம் செய்யலாமா?

கனடாவுக்கு அகதியாக வந்து, அகதிநிலைக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட (accepted as a convention refugee) ஒருவர், தமக்குரிய லான்டட் பத்திரம் கிடைத்த பின்னர், இங்கு நிரந்தரமாக வசிக்கும் உரிமையைப் (permanent resident status) பெறுகின்றார். இவ்வாறன அந்தஸ்துள்ள வேளையில், தமக்கு லான்டட் பத்திரம் இருக்கின்றபடியால் தம்மால் திரும்பவும் கனடாவுக்குள் வரமுடியுமென்ற நம்பிக்கையில், அவரால் தமது சொந்த நாட்டுக்குப் பயணம் செய்ய முடியுமா?

சட்டப்படி ஒரு அகதி அந்தஸ்துப் பெற்றவர் அவ்வாறான பயணத்தை மேற்கொள்வது மிகவும் ஆபத்தானது. இதனால் அந்த நபரது அகதிநிலைக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் 'நம்பத் தகுந்தவையற்றவை' என்ற ஒரு நிலைப்பாட்டுக்கு வர அரசுக்குக் காரணமுண்டு. அதன்மூலம் ஏற்கனவே பெற்ற அகதி அந்தஸ்தினை இழக்கலாம்.

இலங்கையர்கள் பலர் இவ்வாறு தங்கள் நாட்டுக்குப் பயணம் செய்வதை கொழும்பிலுள்ள கனடியத் தூதரகமும், பல விமானக் கம்பனிகளும் கனடிய அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளன. கடந்த மாதத்தில் பல ஆங்கிலத் தினசரிகளில் இது முக்கியமான ஒரு செய்தியாகவும் இடம்பெற்றுள்ளது.

கனடாவிலுள்ள எந்தவொரு விமான நிலையத்திலிருந்தும் பயணத்தை ஆரம்பிக்கும் போது, அந்தப் பயணம் தொடர்பான விபரங்கள் சம்பந்தப்பட்டவரது கடவுச் சீட்டில் (பாஸ்போர்ட்டில்) எழுதப்படுவதில்லை. ஆதலால், தங்களது வெளிநாட்டுப் பயணம் பற்றி எதுவும் கனடிய அரசுக்கோ அல்லது குடிவரவு அதிகாரிகளுக்கோ தெரியவராது என்று பலரும் நினைக்கின்றனர். இது முற்றிலும் தவறாகும்.

வெளிநாட்டுப் பயணம் செய்யும் ஒவ்வொருவரும் தங்களது பயணத்துக்கான விமானச் சீட்டினைப் பெறும்போது தங்களது கடவுச் சீட்டினையும், கனடிய குடிவரவு அந்தஸ்தினை நிரூபிக்கும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். அப்போது பெறப்படும் சகல விபரங்களும் அரசாங்கத்தினால் பெறப்படுகின்றன. இதன் மூலம் கனடாவிலிருந்து வெளியே செல்லும் ஒவ்வொருவர் பற்றிய விபரமும் உடனுக்குடன் கிடைத்து வருகின்றது.

அதுமட்டுமன்றி, பல சமயங்களில் கனடிய லான்டட் பத்திரங்களையும், பிரஜாவுரிமைப் பத்திரங்களையும் உண்மையானவைதானா என்று உறுதி செய்வதற்காக கனடிய அதிகாரிகளுக்கே விமானக் கம்பனிகள் அனுப்புகின்றன. இந்த விபரங்களை வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் ஒவ்வொருவரும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

கனடாவில் ஒருவருக்கு அகதி அந்தஸ்துக் கொடுப்பதற்கான முக்கிய காரணம், அவர் தமது சொந்த நாட்டில் உயிராபத்துக்கு உள்ளாகியிருக்கிறார் என்பதுவே. ஒவ்வொரு அகதியும் தமது 'சுயதரவுப் பத்திரத்தில்' (Personal Information Form) இவ்வாறு எழுதி ஒப்பமிட்டுள்ளார். இந்த அடிப்படையிலேயே விசாரணைகள் நடைபெற்று, அவர் தமது 'கதை'யில் தெரிவித்திருந்த விபரங்கள் நம்பத் தகுந்தவை என்ற அடிப்படையில் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு அகதி அந்தஸ்து வழங்கப்படுகின்றது. இதனை ஒரு வசனத்தில் சொல்வதானால், 'அகதியாக வந்தவர் தமது சொந்த நாட்டுக்குச் சென்றால் அவருக்கு உயிராபத்து உண்டு' என்று குடிவரவு அகதிகள் சபை ஏற்றுக் கொள்கின்றது. அதன்பின்னரே அவருக்கு நிரந்தரக் குடியுரிமைப் பத்திரம் (லான்டட் பேப்பர்) வழங்கப்படுகின்றது.

இவ்வாறாக அகதிநிலை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர், 1989ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் வந்தவராயின் அவரது லான்டட் பத்திரத்தில் CR (Convention Refugee) என்று குறிப்பிடப் பட்டிருக்கும். 1986 மே மாதத்துக்கும் 1988 டிசம்பர் 31ம் திகதிக்குமிடையில் வந்தவராயின் DC (Designted Class) என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இவர்களில் முதலாம் வர்க்கத்தினர் தங்களது சொந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ள முடியாதவர்கள் என்று கூறப்படுகின்றது. ஆனால் இரண்டாம் வர்க்கத்தினரும் அகதிகளாக வந்தவர்களாதலால் அவர்களும் சொந்த நாட்டுக்குச் செல்ல முடியாது என்று சில அதிகாரிகள் சொல்கின்றனர். எனினும் இது பற்றி அறுதியிட்டு எவராலும் சொல்ல முடியாதுள்ளது.

> **Sri Lankan refugee claims questioned**
>
> Documents from the Canadian High Commission in Sri Lanka raise questions about the credibility of the refugee claims from the country. The documents indicate that Sri Lankans granted refugee status in Canada are returning by the hundreds for visits to countries from which they fled. Refugees must not return to the country without good reason or face losing their status. The documents say that of 1,439 persons referred to the commission by airlines for document varification in 1994, more than one-third were Canadian permanent residents landed after claiming status from Sri Lanka.

அகதியாக வந்தபோது தமக்குத் தமது சொந்த நாட்டில் உயிரபாயம் என்று கூறிய ஒருவருக்கு, அவர் ஏற்கப்பட்ட பின்னர், அந்த அபாயம் எவ்வாறு நீங்குகின்றது? என்பதுவே முன்னால் வைக்கப்பட்டுள்ள கேள்வி. லான்டட் கிடைத்த பின்னர் தங்களது சொந்த நாட்டுக்குச் சென்று திருமணம் புரிந்து, மனைவியை இவர்களால் எவ்வாறு ஸ்பொன்ஸர் செய்ய முடியும்? தங்கள் உறவினர்களின் நன்மை தீமைகளுக்கு எவ்வாறு இவர்களால் சென்றுவர முடிகின்றது? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் மழுப்பலாக அமையும்போது அல்லது முன்னுக்குப் பின் முரணாக அமையும்போது, அகதிநிலைக் கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் சவாலுக்கு உள்ளாகின்றன.

இது தொடர்பாக 'கனடியன் பிரெஸ்' தகவலை மேற்கோள் காட்டி 'குளோப் அன்ட் மெயில்' பத்திரிகை கடந்த மாதம் நான்காம் திகதி வெளியிட்ட ஒரு செய்தி இந்தப் பக்கத்தில் பெட்டிச் செய்தியாக இடம்பெற்றுள்ளது. இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் இதுதான்:

"இலங்கையிலுள்ள கனடியத் தூதரகத்திலிருந்து கிடைக்கப்பெற்றிருக்கும் ஆவணங்கள் மூலம், இலங்கையரது அகதி நிலைக் கோரிக்கையின் நம்பத்தகுந்த தன்மை கேள்விக்குரியதாகியுள்ளது.

கனடாவில் அகதிநிலை ஏற்றுக் கொள்ளப்பட்ட பல நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் தாங்கள் புறப்பட்ட தங்கள் நாட்டுக்குப் பயணங்கள் மேற்கொள்வதை மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தெரியப்படுத்துகின்றன. அகதியாக ஏற்றுக் கொள்ளப்பட ஒருவர் சரியான காரணமின்றித் தமது சொந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ள முடியாது. இதனை மீறினால் அவர் தமது வசிப்பிட உரிமையை இழக்கக்கூடும்

கடந்த ஆண்டில் பல விமானக் கம்பனிகளும் மொத்தம் 1,439 பயணிகளது பயணப் பத்திரங்களை உறுதி செய்வதற்காக கனடியத் தூதரகத்திடம் சமர்ப்பித்திருந்தன. இவர்களில் மூன்றிலொரு பகுதிக்கு அதிகமானவர்களும் இலங்கையிலிருந்து கனடா வந்து அகதி அந்தஸ்துக் கோரி, ஏற்கப்பட்ட பின்னர் லான்டட் பெற்றவர்கள்" என்று அந்தப் பத்திரிகைச் செய்தி மேலும் (மறுபக்கம் பார்க்க)

**எஸ்தி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒன்ராறியோ வைத்திய வசதியின் அகதிகள் சேவையில் மாற்றங்கள்

# Health Insurance coverage for Refugees in Ontario

புதிதாகக் கனடாவந்து அகதிநிலை கோரியிருப்பவர்களில் ஒன்ராறியோவில் வசிப்பவர்களுக்கான வைத்திய வசதி, மருத்துவப் பொறுப்புகளைக் கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து கனடிய மத்திய அரசு பொறுப்பேற்றுள்ளது. இதற்கு முன்னர் அகதிநிலை கோரியிருப்பவர்கள் உட்பட அனைவரது வைத்திய சேவைகளும் 'ஓஹிப்' எனப்படும் ஒன்ராறியோ வைத்திய வசதித் திட்டத்தின்கீழ் கவனிக்கப்பட்டு வந்தது.

மத்திய அரசு தனது பங்கினை மாகாண அரசுக்குச் சரியாக வழங்கவில்லையென்ற குற்றச் சாட்டினையடுத்து, குறிப்பிட்ட அகதிக் கோரிக்கையாளர்களுக்கான வைத்திய வசதிகளை மட்டும் மத்திய அரசு பொறுப்பேற்றது. ஆனால், ஒருவர் அகதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், அவர் ஒன்ராறியோவில் வசிப்பாரானால் அவருக்கு 'ஓஹிப்' வழங்கப்படும். இதில் எந்த மாற்றமுமில்லை. இதனால் அகதி நிலைக் கோரிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் மத்திய அரசின் வைத்திய வசதியானது, இடைக்கால வசதி என்று அழைக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்திற்கமைய, அகதிநிலைக் கோரிக்கையாளர்களுக்குக் கட்டுப்பாடான மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ வசதி மட்டுமே வழங்கப்படுகின்றது. இவை அவசியமான அவசரமான சேவைகள் என்று கூறப்படுகின்றது. புதிதாகக் குடியேறியவர் ஒருவர் கட்டாயம் செய்ய வேண்டிய மருத்துவ சோதனை (எக்ஸ் ரே, இரத்த சோதனை, சிறுநீர்ச் சோதனை போன்றவை) களையும் இது உள்ளடக்கும். அகதி மனு நிராகரிக்கப்பட்டு அப்பீல் தீர்ப்பினைக் காத்திருப்போர் அல்லது வேறு விதமான மனுக்களின் அடிப்படையில் தீர்ப்பினை எதிர்பார்த்திருப்போரும் இந்த மத்திய அரசின் திட்டத்தில் அடங்குவர். ஆதலால் Refused அல்லது Rejected Claimants ஆகியோர் இதனால் பலனடைய முடியும்.

அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட அகதிகளுக்கும் இச்சேவை பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், குடும்ப உறவினர்களால் ஸ்பொன்ஸர் செய்யப்பட்டுப் புதிதாகக் கனடா வந்து ஒன்ராறியோவில் குடியேறியுள்ளவர்கள் எந்தவொரு வசதித் திட்டத்திற்குள்ளும் உடனடியாக அடக்கப்பட மாட்டார்கள். இவர்கள், முதல் தொண்ணூறு நாட்களும் தங்கள் சொந்தச் செலவிலேயே வைத்திய வசதிகளைக் கவனிக்க வேண்டும்.

தொண்ணூறு நாட்களின் பின்னர், தாம் ஒன்ராறியோவில் குடியிருந்தவர்கள் என்பதைச் சட்டபூர்வமாக நிரூபித்தால் அவர்களுக்கு 'ஓஹிப்' அட்டை வழங்கப்படும்.

ரொறன்ரோப் பகுதிகளில் வசிக்கும் புதிய அகதிகளுக்கான வைத்திய வசதிப் பத்திரங்களை இங்குள்ள குடிவரவுத் திணைக்கள அலுவலகங்கள் வழங்கி வருகின்றன. இதனைப் பெறுவதற்குப் புதியவர்கள் அங்குமிங்குமாக அலைந்து திரிய வேண்டியுள்ளது. அத்துடன் புதியவர்கள் பலருக்கு ஆங்கிலத்தில் போதிய பரிச்சயமில்லாததால், அவர்கள் தம்முடன் இன்னொருவரையும் அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது. இது நடைமுறையில் சாத்தியமற்றதாகவுள்ளது.

1995 ஏப்ரல் முதலாம் திகதிக்குப் பின்னர் வரும் அகதிகளும் இந்தப் புதிய நடைமுறைக்குள்ளாகின்றனர். மத்திய அரசினால் வழங்கப்படும் இடைக்கால மருத்துவ அட்டை புகைப்படத்துடன் கூடியது. அத்துடன் ஆகக்கூடியது ஓராண்டுக்குச் செல்லுபடியாகும். மேலதிக விபரங்கள் பெற விரும்பின் குடிவரவுத் திணைக்களத்துடன் 416-973-4444 இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

# தொலைபேசித் திருத்த வேலைகளுக்கு பெப்ரவரி மாதத்திலிருந்து கட்டணம்

உங்கள் வீடுகளிலுள்ள தொலைபேசிகளின் திருத்த வேலைகள், பழுதடைந்த வயர்களைத் திருத்துதல், பொருத்துதல் போன்றவைகளுக்கு தொலைபேசி நிறுவனமான 'பெல் கனடா' கட்டணம் அறவிடும் திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ளது. 'கனடிய ரேடியோ தொலைத்தொடர்பு கமிஷன்' அமைப்பு இதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து புதிய கட்டணத் திட்டம் அமலுக்கு வருமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மேற்சொல்லப்பட்ட வேலைகளுக்குக் கட்டணமாக முதலாவது ஒரு மணி நேரத்துக்கு 91 டாலர்கள் அறவிடப்படும். அதற்கு மேலதிகமாக வரும் ஒவ்வொரு பதினைந்து நிமிடங்களுக்கும் 18 டாலர்கள் அறவிடப்படும். இதன்படி, மேலதிகமான ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் 72 டாலர்கள் கட்டணமாக 'பெல் கனடாவி'னால் பெறப்படும்.

இந்தக் கட்டண விகிதத்தினை 'பராமரிப்புச் செலவு' என்று நிறுவனம் தெரிவிக்கின்றது. தொலை பேசிப் பாவனையின் வேறு பல சேவைகளுக்குக் கட்டணத் திட்டத்தை அதிகரிக்க 'பெல் கனடா' முதலில் முயற்சித்தது. இவற்றுள் ஒன்று, உள்ளூர் சேவைகளுக்குக் கட்டணம் அறவிடுவது. ஆனால் கமிஷன் அதற்கு அங்கீகாரம் வழங்கவில்லை. இறுதியில் பராமரிப்புச் செலவுக்குக் கட்டணம் விதிக்க அனுமதி வழங்கப்பட்டது.

தொலைபேசிப் பாவனையாளர் ஒருவர் தமது வீட்டுக்குள்ளிருக்கும் தொலைபேசி வயர்களைத் திருத்த, அல்லது புதிதாக மாற்றி அமைக்க 'பெல் கனடா' ஊழியர்களை அழைக்கும் பட்சத்திலேயே கட்டணம் அறவிடப்படும். வேறு தனியார் நிறுவனங்களின் ஊழியர்களையும் அழைத்து மேற்சொன்ன பராமரிப்பு வேலைகளைக் கவனிக்கலாம். கட்டாயமாக 'பெல் கனடா' ஊழியர்களையே இதற்கு அழைக்க வேண்டுமென்று சட்டம் கிடையாது. இப்புதிய நடைமுறையால் இதுவரை இலவச சேவை பெற்றுவந்த சுமார் ஏழு மில்லியன் தொலைபேசிப் பாவனையாளர் பாதிப்படைவர்.

## அகதியாக வந்து...

(முன்பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றது. தமிழர்கள் கொழும்பில் பாதுகாப்பாக வாழ முடியும் என்றும், அங்கு இவர்களுக்கு உயிராபத்து இல்லை என்றும் காரணங்கள் காட்டிப் பெருந்தொகையான-வர்களினது அகதிநிலைக் கோரிக்கைகள் கடந்த பல மாதங்களாக நிராகரிக்கப்பட்டு வருவதையும் இங்கு நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். கனடாவின் மற்றொரு ஆங்கிலப் பத்திரிகை மிகவும் துவேசம் கக்கும் வகையில் இது தொடர்பாக ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. அகதிகளுக்கும் புதிய குடிவரவாளர்களுக்கும் எதிராகச் செயற்பட்டு வரும் கனடாவின் சீர்திருத்தக் கட்சி (Reform Party) யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில், தங்கள் சொந்த நாட்டுக்குப் பயணம் செய்யும் சகல அகதிகளதும் கனடிய நிரந்தரக் குடியுரிமை அந்தஸ்தினை ரத்துச் செய்து நாடு கடத்த வேண்டும் என்று கூறியுள்ளார். அத்துடன் அவர் நிறுத்திவிடவில்லை. இவ்வாறு சொந்த நாட்டுக்குப் பயணம் செய்பவர்கள் கனடாவில் பிரஜாவுரிமை பெற்றிருந்தால் அதனையும் ரத்துச் செய்ய வேண்டும் என்று சொல்லியுள்ளார்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் 'மிகநெருக்கமான' மரதன் ஓட்டம்!



ஒன்ராறியோ மாகாண சபையின் 130 ஆசனங்களுக்குமான தேர்தல் இம்மாதம் 8ம் திகதி நடைறெவுள்ளது. எல்லாமாக மொத்தம் 652 அபேட்சகர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இதற்கு முன்னர் ஒன்ராறியோ மாகாண சபைத் தேர்தலில் இவ்வளவு தொகையானவர்கள் போட்டியிடவில்லை. 1990ல் நடைபெற்ற தேர்தலில் 615 பேர் மட்டுமே போட்டியிட்டிருந்தனர்.

லிபரல், கன்ஸர்வேடிவ், என். டி. பி ஆகிய மூன்று பிரதான கட்சிகள் சகல தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. ஆகவே 390 அபேட்சகர்கள் பிரதான கட்சிகள் சார்பில் களத்தில் நிற்கின்றனர். மிகுதி 262 பேரும் சிறு கட்சிகள் சார்பி லும், உதிரிகளாகவும், சுயேட்சையாளர் களாகவும் போட்டியில் நிற்கின்றனர்.

கடந்த ஏப்ரலில் தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டபோது, லிபரல் கட்சி 52 வீத மக்கள் ஆதரவைப் பெற்று வெகு முன்னணியில் நின்றது. ஆனால், தற்போது இக்கட்சிக்கான மக்கள் ஆதரவு 40 முதல் 44 வீதத்துக்கு வந்துள்ளது. மிகவும் பின்னால் நின்ற கன்ஸர்வேடிவ் கட்சி எதிர்பாராத வகையில் முன்னேற்றம் கண்டுள்ளது. என். டி. பி மூன்றாம் இடத்தில் நிற்கிறது. ஆனாலும் இறுதி நேரத்தில் தம்மால் முன்னுக்கு வரமுடியுமென்ற நம்பிக்கையை இழக்காது முதல்வர் பொப் ரே சூறாவளிப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். கட்சி முழுவதும் அவரிலேயே தங்கியிருப்பது நன்கு தெரிகின்றது.

ரொறன்ரோ பெருநகரப் பகுதியில் (Greater Toronto Area) 37 தொகுதிகள் உண்டு. இப்பகுதியில் நடத்தப்பட்ட கணிப்பீட்டில கன்ஸர்வேடிவ் முதலாமிடத்தில் (மே 30ம் திகதி) நின்றது. இருப்பினும் மூன்று கட்சிகளினதும் தலைவர்களான மைக் ஹரிஸ் (கன்ஸர்வேடிவ்), லின் மக்லௌட் (லிபரல்) பொப் ரே (என். டி. பி) ஆகியோரில், மிகவும் பிரபல்யமான தலைவராக மக்கள் மத்தியில் பொப் ரே திகழ்ந்து வருகின்றார். இதுவும் மக்கள் கருத்துக் கணிப்பீடு தரும் தகவலே. இவர் ஒரு நேர்மையான அரசியல்வாதி என்பதும் (Gentleman Politician), தேர்தலுக்காக வாக்குறுதிகளை அள்ளிவீச மாட்டார் என்ற பொதுமக்களது அபிப்பிராயமுமே பொப் ரேயை முன்னணித் தலைவர் என்ற ஸ்தானத்தில் வைத்துள்ளது.

“எனது அரசு ஆரம்பித்த திட்டங்களைத் தொடரச் சந்தர்ப்பம் தாருங்கள். மக்களின் அத்தியாவசியமான மருந்து வசதி, கல்வி வசதி, தொழில் வசதி ஆகியவை எனது அரசினால் தொடர்ந்து பேணப்படும்” என்று என். டி. பி தலைவரான பொப் ரே கூறிவருகின்றார்.

ஆனால் மற்றைய இரண்டு கட்சிகளின் தலைவர்களும் எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றித் தாம் முதல்வராக வந்துவிடவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றனர். கவர்ச்சியான தேர்தல் விஞ்ஞாபனங்கள், சொகுசான ஊர்திகளில் திக்விஜயம் என்று தேர்தல் சந்தை, கடை விரித்து 'ஜமாய்'க்கின்றது. வெல்ஃபெயர் இவர்களது கருப்பொருள். வரிகுறைப்பு, தொழில் வாய்ப்பு, கார் இன்சூரன்ஸ் குறைப்பு, போட்டோ ராடர் நீக்கம், வீட்டு வாடகைச் சட்ட மாற்றம், குடியிருப்பாளருக்குப் பாதுகாப்பு என்று

## அடுத்த முதலமைச்சர் பெண்ணா? ஆணா?





வாக்குறுதிகள் 'அலைவரிசை'யில் ஓடியோடிப் பறக்கின்றன.

தேர்தல் என்றால் இலங்கை என்ன? இந்தியா என்ன? ஒன்ராறியோ என்ன? அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரே ரகம்தான்!

பொப் ரே அரசினால் கொண்டுவரப்பட்டு அமலிலிருக்கும் “சோஷியல் கொன்ட்ராக்ட்” எனப்படும் வேலைநாள் குறைப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள், வேறு கட்சி ஆட்சி மாடத்தில் ஏறினால், அந்த “சோஷியல் கொண்ட்ராக்ட்” நீக்கப்படும் என எதிர்பார்க்கின்றனர். இதனால் மாற்றம் ஒன்று அவசியம் என்பது பலரதும் கருத்து. மத்திய ஆட்சியில் லிபரல் இருப்பதனால், மாகாணத்துக்கும் லிபரல் வந்தால் பல அனுகூலங்கள் ஏற்படலாம் என்பது சிலரது நம்பிக்கை.

கடந்த பத்தாண்டுகளாக லிபரலும், என். டி. பியும் ஆட்சிசெய்து மாகாணத்தைக் குட்டிச்சுவராக்கி விட்டார்கள்; கன்ஸர்வேடிவ்வுக்கு ஒரு தடவை சந்தர்ப்பம் (எதற்கு? அதற்குத் தானா?) கொடுத்தால் என்ன என்பது வேறு சிலரின் கேள்வி.

என் டி. பி யின் சொல்லும் செயலும் ஒன்றாகவிருந்தது. செய்ய முடியாதவை களை ஒருபோதும் அவர்கள் வாக்குறுதி யாக வழங்கவில்லை. இடதுசாரிச் சிந்தனை கொண்டவர்கள். நாடே ஓட்டாண்டியாகியிருந்த நிலையில் ஆட்சிக்கு வந்தவர்களால் வேறு என்ன தான் செய்திருக்க முடியும் என்பது ஓரள வுக்கு விஷயம் தெரிந்தவர்களின் வாதம்.

மேற்கூறப்பட்ட மூன்று தரப்பினரையும் கொண்டதே வாக்காளர் படை.

(மறுபக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒன்ராறியோ மாகாண தேர்தல்: இம்மாதம் 7 திகதி வரையும் வாக்காளராகப் பதிவுசெய்யலாம்

நீங்கள் ஒரு கனடியப் பிரஜையா? இந்த மாதம் எட்டாம் திகதி நடைபெறும் ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் நீங்களும் வாக்களிக்க உரிமையுண்டு. இன்னமும் நீங்கள் உங்களை ஒரு வாக்காளராகப் பதியவில்லையானால் இந்த மாதம் 7ம் திகதி வரை பதிவு செய்யலாம் என்பதை மறந்துவிட வேண்டாம்.

கடந்த தேர்தலில் வாக்களித்த ஒருவரது பெயர் கட்டாயமாக வாக்காளர் பட்டியலில் இருக்குமென்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் உங்கள் வீட்டுக்கு வரும்போது இதனை நீங்கள் பார்வையிடமுடியும். ஆனால், அந்த நாட்கள் கடந்த மாதத்தில் முடிவடைந்து விட்டன. எனவே, இனி நீங்கள் தான் உங்கள் பகுதித் தேர்தல் கந்தோருக்குச் சென்று உங்கள் பெயரைப் பதிவுசெய்ய வேண்டும்.

தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒருவர் வாக்காளராவதற்கு மூன்று நிபந்தனைகள் உண்டு. நீங்கள் கனடியப் பிரஜையாக இருக்க வேண்டும்; 18 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்; ஒன்ராறியோ மாகாணத்தில் ஆகக் குறைந்தது ஆறு மாதங்களாவது குடியிருந்திருக்க வேண்டும். இதன்படி, இந்த மாதம் 7ம் திகதி கனடியப் பிரஜையாகும் ஒருவர்கூட 8ம் திகதிய ஒன்ராறியோ மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க முடியும்.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் தேர்தல் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த மற்றைய ஆறு நாட்களிலும் இவை காலை பத்து மணி முதல் பிற்பகல் எட்டு மணி வரை திறந்திருக்கும். உங்களின் பிரஜாவுரிமை அட்டையுடன் நீங்கள் அங்கு சென்று வாக்காளராகப் பதியலாம். பதிவு முடிவடைந்த பின்னர் Certificate of vote எனப்படும் பத்திரம் உங்களுக்குத் தரப்படும். அதில் உங்களது வாக்களிப்பு நிலையத்தின் முகவரியும், அதன் இலக்கமும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்தப் பத்திரத்தை உங்களுடன் வாக்களிப்பு நிலையத்துக்கு எடுத்துச் செல்லுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

உங்கள் தொகுதிக்கான தேர்தல் அலுவலகத்தின் முகவரியையும் தொலைபேசி இலக்கத்தையும் தெரிந்துகொள்ள 416-754-8683 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டால் பெற்றுக்கொள்ளலாம். ரொறன்ரோ பெருநகரில் 37 தொகுதிகள் உண்டு. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான அலுவலகங்களும், தொலைபேசி இலக்கங்களும் உண்டு. (உதாரணம்: சென் ஜோர்ஜ்-சென். டேவிட்: 515-7928; ஸ்காபரோ மேற்கு: 416-759-6903; மிஸிஸாகா கிழக்கு: 905-281-1103).

குறிப்பிடப்படாத தொகுதியில் வசிக்கும் ஒன்ராறியோ வாசியான ஒருவர் தேர்தலில் வாக்களிக்க விரும்பினால் 1-800-668-2727 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். வாக்காளராகப் பதிவு செய்யாத ஒருவர், தேர்தலன்று தமது பிரஜாவுரிமை அட்டையுடனும், தாம் அப்பகுதியில் வசிப்பவர் என்ற சான்றுடனும் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்றால் அவர் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்.

## ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில்...

(முன்பக்கத் தொர்ச்சி)

இவர்களில் ஏறத்தாழ அறுபது வீதமானவர்கள் அடுத்த ஆட்சியைத் தீர்மானிக்கப் போகின்றார்கள்.

முன்னைய தேர்தல்களிலும் பார்க்க இவ்வருடத் தேர்தல் மிகவும் சூடுபிடித்துள்ளது. பல்வேறு சிறுபான்மை இனத்தவர்களும் போட்டியிடுவது சிறப்பான அம்சம். லிபரல் சார்பில் ஸ்காபரோ-எல்ஸ்மெயர் தொகுதியில் தமிழர் ஒருவரும், டொன்மில்ஸ் தொகுதியில் என். டி. பி. சார்பில் தமிழர் ஒருவருமாக இரண்டு தமிழர்கள் போட்டியிடுவது முக்கியமான ஒரு அரசியல் நிகழ்வாகும். இருவரில் ஒருவராவது வெற்றி பெறுவார்களானால், அதுவே ஓர் சாதனையாக தமிழர் சரித்திரத்தில் எழுதப்படலாம்.

மே மாதக் கடைசிவார நிலைவரத்தின்படி, லிபரல் அல்லது கன்ஸர்வேடிவ் கட்சியே ஆட்சியைக் கைப்பற்றக்கூடியதாக இருந்தது. இரண்டு கட்சிகளும் தங்கள் தலைவரே அடுத்த முதல்வர் என்று அவர்களை அறிமுகம் செய்து வருகின்றன. 50 வயதான மைக் ஹரிஸா அல்லது 52 வயதான லின் மக்லெளடா அடுத்த முதல்வர் என்பது எட்டாம் திகதி இரவுதான் தெரியவரும்.

எந்தவொரு கட்சியாவது 66 ஆசனங்களில் வெற்றிபெற்றால் தனிக்கட்சியாக ஆட்சிபீடம் ஏறமுடியும். இல்லையேல், பலம் குறைந்த 'சிறுபான்மை' அரசாகவே அது அமையும். அல்லது கூட்டரசாங்கம் ஒன்று உருவாக்கப்படலாம். அதிலும், யார் யாருடன் கூட்டுச் சேருவது என்ற கேள்வி எழும். நிலைமையை உற்று நோக்கும்போது எதனையுமே திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது.

இருப்பினும், இந்தத் தேர்தலுக்கான மரதன் ஓட்டத்தில் இரு அணிகள் நெருக்கமாக, மிகமிக நெருக்கமாக ஓடிக்கொண்டிருப்பது மட்டும் தெரிகின்றது. முடிவு- பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிகளின் கையிலா? அல்லது வாக்காளப் பெருமக்களின் புள்ளடிகளிலா?

## 'லீகல் எய்ட்'டில் மேலும் பல வெட்டுகள் விரைவில்!

ஏற்கனவே தனது சேவையில் பல்வேறு வெட்டுகளையும் கொண்டு வந்திருக்கும் 'ஒன்ராறியோ லீகல் எய்ட்' திட்டம், நிதி நெருக்கடி காரணமாக மேலும் பல வெட்டுகளைக் கொண்டுவருவது பற்றித் தீவிரமாக ஆலோசித்து வருகின்றது.

ஏழைகளுக்கும், வருமானம் குறைந்தவர்களுக்கும் உதவவெனக் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்துக்கு அடுத்தாண்டுக்கு மேலதிகமாக 14 மில்லியன் டாலர்கள் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் வழக்கறிஞர்களுக்கான நிதியில் ஓரளவுக்கு 'வெட்டு' ஏற்படுத்த அதிகாரிகள் விரும்புகின்றனர்.

அண்மைக் காலங்களில் வேலையிழப்போர் தொகை அதிகரிப்பதும், பெருமளவிலானவர்கள் வெல்ஃபெயர் பெறச் செல்வதாலும், அவர்களுக்கான சட்ட நிதியுதவியைக் கவனிக்க வேண்டிய கட்டாயம் 'லீகல் எயிட்' அலுவலகத்துக்கு ஏற்பட்டுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடி அதிகரிக்குமானால் இந்தத் திட்டம் மோசமாகப் பாதிப்படையக்கூடும்.

வழக்கறிஞர்களுக்கு வழங்கப்படும் 'லீகல் எய்ட்' சேர்ட்டிபிக்கட் ஒவ்வொன்றும் 930 டாலர்களைக் கொண்டதாக அமையும் என மதிப்பிடப்பட்ட போதிலும், அது 968 டாலராக அதிகரித்துள்ளது. அடுத்தாண்டில் இது 978 டாலராகலாம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் அடுத்தாண்டுக்கு 'லீகல் எய்ட்' டுக்கு 217.9 மில்லியன் டாலர்கள் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிள்ளைகளை அடித்தலும் 911 தொலைபேசி இலக்கமும்

## Spanking Children is against the law

அடியைப்போல அண்ணன் தம்பிகூட உதவான்; அடியாத மாடு படியாது; Spare the rod and spoil the child எனப்படுகின்ற எத்தனையோ பழமொழிகளுக்கு மத்தியில்தான், நாம் இந்த நாட்டுக்கு வரும்வரை வாழ்ந்து வந்தோம். பிள்ளை வளர்ப்பு என்றால் அடித்துத்தான் திருத்தலாம் என்பதே எமது கொள்கை. யாழ்ப்பாணத்தில் வீட்டு முற்றத்துப் பூவரசு மரத்தில் எத்தனையோ தடிகள் முறிபட்டிருக்கும். வீடுகளில் சுவரில் பிரம்பு கொளுவப்பட்டிருப்பது ஒரு சாதாரண காட்சி. அது மாத்திரமல்ல, பாடசாலையில் அடிவிழுந்தது என்று வீட்டில் வந்து சொன்னால், இன்னும் நான்கு அடி கூடவிழும், அல்லது எமது பெற்றோர்கள் ஆசிரியரைக் காணும்பொழுது, தமது மகனுக்கு மேலும் நன்றாக அடிக்கும்படி வேண்டுகோள் விடுப்பார்கள்.

இவ்வாறு வளர்க்கப்பட்ட நாம் நல்ல நிலைக்கு வரவில்லையா, மனத்தாக்கம் அடைந்தோமா, அடியினால் ஏற்பட்ட உளப்பாதிப்பு எமது பிற்கால வாழ்க்கையைப் பாழாக்கியதா என்றெல்லாம் இந்த நாட்டுக்கு வந்த பின்னர் எம்மை நாமே கேட்டபடி இருக்கின்றோம். அதற்கு மாறாக அந்தக் காலத்தில் வீட்டிலும், பாடசாலையிலும் வாங்கிய பிரம்படிகள் காரணமாகத்தான் நாம் இன்று சமூகத்தில் பண்புள்ள, அறிவுள்ள மக்களாகத் தலை நிமிர்ந்து வாழ்கிறோம் என அபிப்பிராயப்படுகின்றோம்.

இது இவ்வாறிருக்க, இந்த நாட்டில் பிள்ளைகளை அடிக்க முடியாது என்பதையும், அடித்தால் சட்டத்தின் கரங்களில் சிக்கி அவஸ்தைப்படுவோம் என்பதும் தற்போது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அதுமாத்திரமன்றிச் சில குழந்தைகள் தங்கள் பெற்றோர்களைப் பணயக் கைதிகளாகப் பயமுறுத்தவும் தொடங்கி விட்டார்கள். ஒரு நாட்டுக்கு வருகை தந்தால் அந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைய வாழவேண்டியதுதான் எமது கடமை. அவ்வாறு வாழ்வது கடினமாக இருந்தால், அதற்கு ஏற்ற அறிவைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியம்.

பாடசாலையில் பிள்ளைகளுக்கு அவர்களைப் பெற்றோர்களோ அல்லது பிறத்தியாரோ அடிக்குமிடத்து அவர்கள் உடனடியாக 911க் கூப்பிட வேண்டுமென்றோ அன்றேல் வகுப்பாசிரியருக்கோ வேறு ஆலோசகர்களுக்கோ அல்லது அவர்களது குடும்ப வைத்தியருக்கோ உடனடியாக அதனைத் தெரியப்படுத்த வேண்டும் என அறிவுரை வழங்கப்படுகின்றது. இது எமது சமூகத்தவருக்கு ஒரு பிழையான போதனையாகத் தெரியலாம் ஆயினும், இந்த நாட்டுச் சமூகத்தவரின் குடும்ப அமைப்பினைப் பார்க்கும்பொழுதுதான் இதன் நன்மை எமக்குப் புலப்படும். பலதார விவாகங்களும், முதல் தாரக் குழந்தைகளோடு இரண்டாந் தாரத் தாயோ தந்தையோ வாழும்பொழுது ஏற்படும் இன்னல்களையும் நாம் நாளாந்தம் பத்திரிகைகளில் வாசிக்கின்றோம்.

எம்மால் கற்பனைகூடப் பண்ணமுடியாத அளவுக்குச் சில பிள்ளைகள் துன்புறுத்தப்படுவதையும், ஏன், சில சமயங்களில் கொலை செய்யப்படுவதையும் வெகுஜன தொடர்புச் சாதனங்களின் மூலம் அறிகின்றோம். எங்கள் சமூகத்தில் இவை நடைபெறாததால் பாடசாலைகளில் எமது பிள்ளைகளுக்கு வழங்கப்படும் அறிவுரைகள் பிழையாகத் தோன்றுகின்றது.

உங்கள் பிள்ளையை நீங்கள் அடித்ததற்கான அடையாளங்களோடு அவர் பாடசாலைக்குச் செல்லுமிடத்து அதனை ஒரு ஆசிரியர் அவதானிப்பாரானால் அதுபற்றி உடனடியாக அவர் குழந்தைகள் நலன்புரி நிலையத்துடன் (Children's Aid Society) தொலைபேசியில்

**கனகேஸ்வரி நடராஜா**
Teacher
Yorkdale S. S, North York

தொடர்புகொண்டு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் ஆசிரியருக்குத் தண்டமாக ஆயிரம் டாலர்கள் அல்லது ஒரு வருடச் சிறைத் தண்டனை வழங்குவதற்குச் சட்டத்தில் இடமுண்டு.

மேற்படி நிலையத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டவுடன் ஒரு முறைப்பாட்டு அறிக்கையையும் ஆசிரியர் தயார் செய்ய வேண்டும். டெலிபோன் அறிவித்தல் கிடைத்தவுடன் குழந்தைகள் நலன்புரி நிலையத்தவர் உங்கள் வீட்டுக்குச் சமூகம் தருவார்கள். அவர்கள் உங்கள்மேல் கொண்டிருக்கும் சந்தேகம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டால், உங்கள்மேல் வழக்குத் தாக்கல் செய்யப்படும். மேலும் உங்கள் வீடு, பிள்ளைக்கு ஒரு பாதுகாப்பான சூழலாக அமையவில்லை என அவர்கள் கருதினால் உங்களின் பிள்ளையை குழந்தைகள் நலன்புரி நிலைய அங்கத்தவர்கள் பாரமெடுப்பார்கள்.

ஆசிரியர் தயாரித்த அறிக்கையைப் பார்ப்பதற்குப் பெற்றோருக்குச் சகல உரிமையும் உண்டு. வழக்கு விசாரிக்கப்படும்பொழுது ஆசிரியரும் சாட்சி சொல்ல அழைக்கப்படுவார். ஆசிரியர்கள் இத்தகைய ஒரு செயலைக் கையாளும்பொழுது மிகவும் உளப்பாதிப்புக்கு ஆளாகிறார்கள். ஆகவே, பிள்ளையின் நலன் கருதியும் சட்டத்துக்கு அமையவுமே பாடசாலைகள் இத்தகைய செயல்களைச் செய்கின்றன.

பிள்ளைகளை அடிப்பதனால் பலவிதமான தீமைகளே ஏற்படுவதாக உளவியலாளர்கள் கருதுகின்றனர். சிறுபிள்ளைகளுக்கு பெரியவர்களே வாழ்க்கை உதாரணங்களாக அமைகின்றார்கள். அடிக்கும் பெற்றோரோடு வாழும் குழந்தை பிற்காலத்தில் முரட்டுக் குழந்தையாகவோ, வன்செயல்களைச் செய்யும் இயல்புடையனவாகவோ மாறும் வாய்ப்புண்டு. அடி விழுந்ததினால் ஏற்படும் துன்ப நிகழ்ச்சிகளின் வடுக்கள் மனதில் பதிந்து பின்பு மனைவியையும் பிள்ளைகளையும் கொடுமைப்படுத்தி இன்பம் காணும் இயல்பினை ஏற்படுத்தும் என உளவியலாளர்கள் கருதுகின்றனர். அடிவாங்கிய பிள்ளை சிறுமைப்படுத்தப்படுகின்றது. அடிவாங்கும் பிள்ளைகள் மேலும் மேலும் குழப்படிகளைச் செய்வதாகவே ஆராய்ச்சிகள் பகர்கின்றன.

அடியாமல் எப்படிப் பிள்ளைகளைத் திருத்தலாம் என்று பலரும் எண்ணலாம். நல்ல பராமரிப்பு முறைகள் (Positive pre-venting skills) பற்றிய கருத்தரங்குகள் பாடசாலைகளால் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அவற்றிற்கெல்லாம் செல்வதற்கு நேரம் கிடைக்காதவர்கள் தனிப்பட்ட முறையில் கூட ஆசிரியரோடு போய் அளவளாவலாம். ஆறு வயதுக்கும் பன்னிரண்டு வயதிற்கும் இடையிலேயே ஒரு குழந்தையின் நன்னடத்தை விருத்திக்கான அத்திபாரம் இடப்படுகின்றது. இக்காலகட்டத்தில் பெற்றோர் பிள்ளைகளோடு மிகவும் நெருக்கமாகப் பழகி அவர்களை நன்முறைப்படுத்துதல் வேண்டும். அன்பாகவும் சிநேகமனப்பான்மையுடனும் பேசிப் பிரச்சனைகளைத் தீர்க்கவும் உங்கள் விருப்பு வெறுப்புகளை நேரத்துடன் அவர்களிடம் தெரிவிக்கவும்.

அத்துடன், உங்கள் விருப்பு வெறுப்புகள் எப்பொழுதும் ஒரே மாதிரி அமையவேண்டும். உங்கள் மனநிலைக்கு ஏற்றவாறு அவற்றை மாற்றி அமைத்துப் பிள்ளைகளின் மனதில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம். பிள்ளைகள் பிழைவிடுமிடத்து அவர்களுக்கு வழங்கப்படும் சிறு சலுகைகளைக் கொடுக்காமல் விடவும். அப்பொழுதுதான் அவர்கள் தங்களின் பிழைகளை

(மறுபக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவிஞர் கந்தவனம் தரும்

# கனடியக் காட்சிகள்

நிகழ்காலம்

'ஹலோ.'
'வணக்கம்.'
வணக்கம். சொல்லுங்கோ.'
'என்ன இப்பவும் பழங் காலத்திலேயே நிற்கிறியள். எப்ப நிகழ்காலத்துக்கு வரப்போறியள்.'
'விளங்கேல்லை.'
'கனடியக் காட்சிகளைத்தான் சொல்றன்.'

மறுமுனையில் திரு. பொ. கனகசபாபதி அவர்கள்.

கனடியக் காட்சிகளைப் படித்துவிட்டு அபிப்பிராயம் தெரிவித்துவரும் நண்பர்கள் பலர். குறமகள், திருமதி. தங்கராணி நடராசா, புலவர் சிவானந்தன், எஸ். பத்மநாதன், இலண்டன் ஈ. கே. ராஜகோபால், எஸ். ஜெகதீசன் என்று குறிப்பிடப்போனால் பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

இவர்கள் யாவரிலும் கனகசபாபதி அவர்கள் வித்தியாசமானவர். மாதாமாதம் தவறாது தொலைபேசி அழைப்பு அவரிடமிருந்து வரும். அத்துடன் 'தமிழர் தகவல்' ஆசிரியருக்கும் என்னைப் பற்றி 'காரசாரமாக' விமர்சித்து வருகின்றார் என்று கேள்வி.

மேலுள்ள தொலைபேசி உரையாடல் மூன்று மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றது. நான் பழங்கதை பேசுவதை விடுத்து நிகழ்காலத்துக் காட்சிகள் பற்றி எழுதவேண்டும் என்பது அவரது விருப்பம். சொல்லவேண்டிய சில பழங்கதைகள் இன்னும் உள்ளன. அவற்றை முடித்துக் கொண்டு விரைவிலேயே நிகழ்காலத்துக்கு வந்துவிடுகிறேன் என்று அவருக்கு ஆறுதல் சொன்னேன். எந்த மட்டில் என்று கேட்டார். நாலைந்து வருடங்களின் பிறகு என்று பதிலளித்தேன். காணுகின்ற போதெல்லாம் இந்தப் பகிடி புன்முறுவலாக அவர் முகத்தில் பூத்துநிற்கும்.

கனடாவில் கடுகதி வேகத்தில் ஒரு இயந்திரம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்குப் பெயர்தான் கனகசபாபதி. தொழில்சார்ந்த கடமைகள், பொதுப்பணி குறித்த கூட்டங்கள், ஆலோசனைகள், மறந்தும் மறவா மகாஜனாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க அலுவல்கள், சமையல் முதலான பிள்ளைகளைக் கவனிக்கும் வீட்டுப் பொறுப்புகள், குடும்பம்-சமூகம்- நட்புத் தொடர்பான நல்லுறவுத் தரிசனங்கள், எழுத்து வேலைகள் அனைத்தையும் திட்டமிட்ட ஒழுங்கில் தவறாது நடத்திவரும் ஓர் அபூர்வ கணனி. இதற்கிடையில், அருமையான வாசிப்புப் பழக்கத்தையும் அவர் கைவிட்டது கிடையாது. கனடாவில் இருந்தும், தமிழ்நாட்டில் இருந்தும் வரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றைத் தவறாது படித்து வருகின்றார். அவை மட்டுமா? சினிமா, தற்கால நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் எதுபற்றிக் கேட்டாலும் வாட்டு வாட்டென்று வாட்டுகின்றார்.ஒரு புதுமையான விடயம் என்னவென்றால், இப்பொழுதெல்லாம் பழைய இலக்கியங்களையும் புரட்டத் தொடங்கியுள்ளார்.

ஆக, என்னை இறந்த காலத்தைவிட்டு நிகழ்காலத்துக்கு இறங்கும்படி வற்புறுத்துவதெல்லாம், தாம் நிகழ்காலத்தில் இருந்து பழங்காலத்துக்கு ஏறுவதற்கோ என்று எண்ணத் தோன்றுகின்றது. வாசகர்களாகிய சாதகர்களுக்கு இந்த இரண்டு கிரகங்களும் ஒரு வீட்டில் இருப்பது சாதகமாக இருக்காதோ என்னவோ? மிக விரைவில் கனகசபாபதி மாஸ்டர் அவர்கள் சோதிடம் பற்றி எழுதத் தொடங்கினாலும் நாம் ஆச்சரியப்படப் போவதில்லை!

இவரும் ஏனைக் கற்றறிந்த நல்லோரும் எனக்கு இரசிகர்களாக இருப்பது யான் செய்த புண்ணியம்.

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

– திருஞானசம்பந்தர்.

# நீதியான, நிரந்தரமான தீர்வை நோக்கிய மாபெரும் ஊர்வலம் ஒட்டாவாவிலும், ரொறன்ரோவிலும்

தமிழீழத்துக்கான அங்கீகாரத்தைக் கோரும் மாபெரும் ஊர்வலங்கள் இந்த மாதம் 5ம் திகதி ஒட்டாவாவிலும், 10ம் திகதி ரொறன்ரோவிலும் நடைபெறவுள்ளன.

நிரந்தரமான, நியாயமான தீர்வு நோக்கிய இந்த ஊர்வலங்கள் உலகத் தமிழர் இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஏழு அம்சங்களின் அடிப்படையில் நடைபெறும் இந்த ஊர்வலங்களில் கனடாவாழ் தமிழ் மக்கள் பெருமளவில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நீதியானதும், சர்வதேசச் சட்டங்களுக்கு உட்பட்டதுமான தமிழ் மக்களின் போராட்டத்தின் ஊடாகவே நிரந்தரமான நீதியான சமாதானத்தை அடைய முடியும் என்பதால், சர்வதேச நாடுகள் தமிழீழப் போராட்டத்துக்குத் துணை நின்று, சகல தார்மீக உதவிகளையும் வழங்க வேண்டும் என்பது இதன் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகும்.

ஒட்டாவாவில் நடைபெறும் ஊர்வலத்துக்கான பஸ் வண்டிகள் ஜுன் 5ம் திகதி காலை ரொறன்ரோ, மிஸிஸாகா, ஸ்காபரோ ஆகிய இடங்களிலிருந்து புறப்படும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுபவர்கள் ரொறன்ரோவில் 461-5991, 285-1947 ஆகிய இலக்கங்களுடனும், மொன்றியலில் 514-735-9984 ஆகிய இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம்.

# பிள்ளைகளை...

(முன்பக்கத் தொடர்ச்சி)

உணருவார்கள். தண்டனை வழங்கிய பின்னர் பிள்ளைகளை நச்சரிக்காதீர்கள். அவர்களின் பிழைகளால் ஏற்படும் பலாபலன்களை அவர்களை அனுபவிக்க விடவும். அப்பொழுதுதான் அவர்களுக்குப் பிழையான நடத்தைக்குப் பயப்படும் மனநிலை ஏற்படும். பல பெற்றோர்கள் தங்களுக்கு பிள்ளைகளோடு பொறுமையாக இருந்து கலந்துரையாட நேரம் கிடைப்பதில்லை எனக் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். நேரத்தைக் கண்டுபிடிப்பது பெற்றோரின் கடமை. அதிக நேரம் கிடைக்காவிட்டாலும், கலந்துரையாடும் நேரம் பயனுள்ள நேரமாக அமைய வேண்டும். பிள்ளைகளைத் தண்டிப்பதை விட்டு அன்பால் நல்வழிப்படுத்துவோமாக.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனத்துவேசம் RACISCM இனத்துவேசம் RACISCM

## இனத்துவேசம் என்றால் என்ன? What is Racism?

கனடியச் சமுதாயம் பன்முகப்பட்டது. கறுப்பர், வெள்ளையர், ஆசியர்,, ஆதிவாசிகள் எனப் பல இனத்தவர்களும் நிறத்தவர்களும் ஒன்றாகச் சேர்ந்து, வேலை செய்து வாழ்ந்து வருகின்றார்கள்.

கனடாவில் சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளைப் பாதுகாக்கச் சட்டங்கள் உள்ளன. கனடிய, ஒன்ராறியோ மனித உரிமைச் சட்டங்கள், இனம் முதலாகவுள்ள எவ்வகைப் பாரபட்சங்களையும் முற்றாகத் தடைசெய்கின்றன. உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாக்கும் கனடியச் சாசனம் எல்லாக் கனடிய மக்களுக்கும் சமஉரிமைகள் வழங்குகின்றன. துரதிட்டவசமாக, இச்சட்டங்களை நடைமுறைப்படுத்தல் எப்பொழுதும் இலகுவாக இருப்பதில்லை. அதனாலோ என்னவோ கனடிய சமுதாயத்தில் இனத்துவேசம் தலையெடுத்து வருகின்றது.

இனத்துவேசம் மிகவும் கெடுதியானது. இது கனடாவின் வாழ்க்கைப் பயன்களிலிருந்து மக்களைப் புறம்படுத்துகின்றது. மேலும், மக்களைக் கனடியச் சமுதாயத்துக்கு முழுமையாக உழைக்க விடாமலும் தடுக்கின்றது.

மக்கள், இனத்துவேசம் பற்றியும் அது தொடர்பான தமது அனுபவங்கள் பற்றியும் பேசுவதற்கு வேண்டிய வார்த்தைப் பிரயோகங்களைப் பின்வரும் தகவல்கள் விளக்குகின்றன. இனத்துவேசம் பற்றிப் பேசுவதால் பிரச்சனை தீர்ந்துவிடப் போவதில்லை. ஆனால் அது ஒரு முக்கியமான முதற்படி.

இனத்துவேசம் மிகவும் சிக்கலானது. அதனை இல்லாமற் செய்வதற்குத் தனியாட்கள், அரசாங்கம், காவல்துறை, பாடசாலைகள், வேலைத் தலங்கள் என்று எல்லா மட்டங்களிலும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

இனத்துவேசம் என்றால் என்ன என்பது எங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயம். கறுத்தவரின் நிறத்தைப் பகிடி பண்ணுதல், வெள்ளை இளைஞர்கள் ஒரு சீனரைத் தெருவில் தள்ளுதல், வீட்டுச் சொந்தக்காரர் வித்தியாசமான நிறத்தவருக்கு வீட்டை வாடகைக்கு விட மறுத்தல் ஆகிய எல்லாமே இனத்துவேசமாகும். ஏனெனில், இவ்விதமான உதாரணங்களை நாம் நடைமுறையில் மிக இலகுவாகவே சந்திக்கின்றோம். இவை ஒன்றும் விளங்கிக் கொள்வதற்குக் கடினமானவையல்ல. ஆனால் இனத்துவேசம் பெரிதும் விளங்க முடியாத வகையிலும் மறைமுகமான வழிகளிலும் இயங்குகின்றன. இவற்றுக்கு உதாரணங்களாக, வெள்ளையரல்லாத மாணவர்களைப் பற்றி ஒரு பாடசாலை ஆசிரியர் கொண்டிருக்கக்கூடிய குறைவான எதிர்பார்ப்புகள், தொழிலுக்குத் தேவையில்லாத போதிலும், தொழில் அதிபரால் "கனடிய அனுபவம்' கேட்கப்படல் போன்றவற்றைக் காட்டலாம்.

இனத்துவேசம் மேன்மக்கள் கீழ்மக்கள் என்னும் அடிப்படையில் பிறக்கின்றது. சில இனத்தவர் பிறப்பிலேயே தாம் மேலானவர் என நம்புகின்றனர். 19ம் நூற்றாண்டில் சில ஐரோப்பிய விஞ்ஞானிகள் வெள்ளை இனத்தவர் உயர்வான உயிரினத்தவர் என்று சொன்னார்கள். பலர் இதனை நம்பினர். இக்காலத்தில் இக்கொள்கை பிழை என்பதை நாம் நன்கு அறிவோம். பெரும்பான்மையானோர் அதனை நிராகரித்துள்ளனர். ஆனாலும் இத்தகைய எண்ணங்கள் மக்களின் சிந்தனைகளையும் சமுதாய நடைமுறைகளையும் பாதித்துள்ளன.

இனத்துவேச எண்ணங்களுடன் மக்கள் பிறப்பதில்லை. அவற்றைக் குடும்பம், நண்பர்கள், சமுதாயம் ஆகியவற்றிலிருந்து பொதுவாகப் பெற்றுக் கொள்கிறார்கள். அவை ஒரு சார்பானவை (ஓரமானவை) என்றோ தப்பானவை என்றோ அவர்களுக்குத் தெரிவதுமில்லை.

### மாறா மனப்பான்மைகளும் ஓரமும்
### Stereotypes and blass

மாறாமனப்பான்மைகளாவன ஒரு குழுவினரைப் பற்றி மிகவும் எளிதாகப்பெற்ற நம்பிக்கைகள். உதாரணம்:
"ஆதிவாசிகள் குடிகாரர்."
"இலத்தீன் அமெரிக்கர் ஒருபோதும் நேரத்துக்கு வரமாட்டார்."

சில ஆதிவாசிகள் அதிகம் குடிப்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் பலர் அப்படியல்லர். சில இலத்தீன் அமெரிக்கர் அடிக்கடி பிந்திவருதல் கூடும். ஆனால் பலர் நேரம் தவறாதவர்; கடும் உழைப்பாளிகள். தவிரவும், ஒவ்வொரு இனத்திலும் குடிகாரரும் பிந்தி வருகின்றவரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

மாறாமனப்பான்மைகள் மக்களை வகைப்படுத்துகின்றன. அவ்விதமுறை மக்களைத் தனியாட்களாக மதிப்பிட விடாமல் தடுக்கின்றது.

ஓரம் என்பது சார்பு எண்ணம் - ஒரு பக்கம் சார்ந்து நிற்பது. ஒன்றுக்குச் சார்பாக இருந்தால் இன்னொன்றுக்கு அது மாறாக இருக்கும். உதாரணமாக, ஒரு பாடசாலை கனடாவுக்கு உள்ளூர்வாசிகள் செய்த பங்களிப்பினைப் புறக்கணித்து ஐரோப்பியரின் பங்களிப்பைப் பற்றிச் சரித்திர பாடத்தில் படிப்பித்தால், அப்பாட நெறி ஐரோப்பியச் சார்புடையதாகின்றது. அதாவது, உள்ளூர் வாசிகளுக்கு வஞ்சகம் செய்வதாகின்றது.

மக்கள் பெரிதும் தமது இனக் குழுக்களைச் சார்ந்த கருத்துடையவர்களாக இருப்பதைக் காண்கின்றோம். இதனை வெளிப்படையாக, "நாங்கள் முதல் தரமானவர்" என அவர்கள் சொல்லிக் காட்டவும் தவற மாட்டார்கள். சிலர் தமது குழு சாதாரணமானது என்றோ தாழ்வானது என்றோ தமக்குள் கருதுவதும் உண்டு.

### தப்புணர்வும் பாரபட்சமும்
### Prejudice and Discrimination

தப்புணர்வு என்பது ஒருவரைப் பற்றி, ஓர் இனத்தை அல்லது இனத்தின் ஒரு கூட்டத்தினரைப் பற்றிக் கொண்டுள்ள எதிர் மனப்பான்மை அல்லது நம்பிக்கை. இது முன்கூட்டியே மனத்தில் ஏற்படுத்துகின்ற ஒரு தீர்மானத்தால் வருவது.

தப்புணர்வானது மனோநிலையுடன் தொடர்புடையது. எனின், பாரபட்சம் செயற்பாட்டோடு தொடர்புடையது. ஓர் இனத்தின் அல்லது இனமொன்றின் குறிப்பிட்ட ஒரு குழுவுக்கு எதிரான செயல் பாரபட்சம் ஆகின்றது. அதாவது, ஒரு குறிப்பிட்டவர் ஏனைய மக்களிலும் பார்க்க நியாயமற்ற முறையில் அல்லது வேறு விதமாக நடத்தப்படுதல். உதாரணமாக, ஒரு கடைக்குள் சில கறுப்பு இளைஞர்கள் புகுகின்றார்கள். அவர்களைக் கண்டதும் கடைக்காரர் பயப்படுகின்றார் அவர்கள் களவெடுக்கத்தான் வருகின்றார்கள் என்று கருதுகின்றார். இது கறுப்பர்களுக்கு எதிரான அவரது தப்புணர்வு. அவர்களை அடித்துக் கடைக்கு வெளியே அவர் தள்ளுவாராயின், அவர் பாரபட்சம் காட்டுகின்றார் என்று பொருள். ஏனெனில், அவர் தமது வாடிக்கையாளர் எல்லோருக்கும் அப்படிச் செய்வதில்லை. கறுப்பர்களை மட்டும் இவ்விதம் வித்தியாசமாக நடத்துகின்றார்

பாரபட்சம் ஆதிக்கத்தோடு இணையும் பொழுது பாரதூரமான பிரச்சனையை ஏற்படுத்துகின்றது. இத்தகைய நிலைமைகளில், பெரிய தாபனங்களோ முழுச் சமுதாயமோ ஆதிக்கக் குழுவைச் சாராதவர் களைத் தள்ளி வைக்கும் வகையில் விதி முறைகளை அமைக்கின்றன. இது திட்ட மிட்ட பாரபட்சம் (systematic discrimination) எனப்படும். இது பற்றிய மேலும் பல விபரங் கள் அடுத்த கட்டுரையில் இடம்பெறும்.

(The support of the Government of Ontario through the Ontario Anti-Racism Secretariat,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மொன்றியல் செய்திகள்

தொகுப்பு: ஆறுமுகன்

## புகைப்படம் ஒட்டப்பட்ட புதிய சாரதிப்பத்திரம்

கியுபெக் மாநிலத்தில் தற்போது பாவனையில் இருந்துவரும் சாரதி அனுமதிப் பத்திரமானது அதன் உரிமையாளரது விபரங்களைக் கொண்ட சாதாரண ஒரு அட்டை என்பது யாவரும் அறிந்ததே. இந்த அனுமதிப் பத்திரத்தைக் களவாடியும், சம்பந்தப்பட்டவரின் விருப்பத்தின் பேரில் அவரது நண்பர்களோ வேண்டியவர்களோ வாகனங்களை ஓட்டுவதைத் தடுப்பதற்காகவும், ஒருவருக்காக இன்னொருவர் சாரதிப் பரீட்சை எழுதுவதிலிருந்து தடுப்பதற்காகவும், புதிய சாரதிப் பத்திரம் இங்கு வரவுள்ளது.

இந்தப் புதிய சாரதிப் பத்திரத்தில் சம்பந்தப்பட்டவரின் விபரங்களுடன் கையெழுத்திடப்பட்ட புகைப்படம் ஒட்டப்பட்டிருக்கும். கியுபெக் மாநில போக்குவரத்து அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

## விளையாட்டு மைதானங்கள் குருஷேத்திரமாகின்றன

மொன்றியலில் தற்போது ஈழத்தமிழர்களது விளையாட்டுக் கழகங்கள் பெருமளவில் இயங்க ஆரம்பித்துள்ளன. குளிர்காலம் மறையுமுன்னரே இங்கு பல்வேறு போட்டிகளும் ஆரம்பமாகிவிடும். அத்துடன் இவர்களது போட்டிகள் நடைபெறும் மைதானங்கள் குருஷேத்திரங்களாகவும் மாற்றம் பெற்றுவிடுகின்றன. இது இங்கு வாழும் தமிழர்கள் அனைவருக்கும் பெரும் கவலையளிக்கின்றது.

சூரிய வெளிச்சத்தைப் பகல்வேளையில் காணும்போது மகிழ்வுறும் மொன்றியல்வாழ் தமிழர்கள், இந்த வேளையில் விளையாட்டுப் போட்டிகளையும், கலை விழாக்களையும், சுற்றுலாக்களையும் ஏற்பாடு செய்வார்கள். ஆனால் அண்மைக் காலத்துச் சில சம்பவங்கள் அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றன.

இங்குள்ள விக்டோரியா விளையாட்டுக் கழகத்தினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் ரொறன்ரோ-கியுபெக் மாநில வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த மாதம் 21ம் திகதி நடைபெற்றது. பதினைந்துக்கும் அதிகமான கழகங்கள் கலந்துகொண்டன.

அன்றைய மாலை நேரத் தொடர் ஆட்டத்தின்போது, பகை உணர்வை மனதில் வைத்துப் பழிவாங்கும் இரு கோஷ்டிகள் பார்வையாளர் மத்தியில் கோடரி போன்ற ஆயுதங்கள் கொண்டு கைகலப்பில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டிலும் இதே மாதிரிச் சம்பவம் நடைபெற்று, அதன் தொடர்பாகக் கலை விழா அரங்கில் துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றதும் அதன் பின்னர் பொலிஸாரின் கவனத்தில் ஈழத் தமிழரின் இளைய தலைமுறையினர் பற்றிய 'அவதான நிலை' இருப்பதும் யாவரும் அறிந்ததே.

## இரண்டு ஆலயங்களுக்கான கட்டட வேலைகள்

மொன்றியல், கியுபெக் சைவ மகா சபையினரால் கட்டப்படவிருக்கும் அருள்மிகு திருமுருகன் ஆலயத்துக்கான கட்டட நிர்மாண வேலைகள் ஆகம விதிகளின்படி நடைபெற்றதைத் தொடர்ந்து இந்த மாதம் 18ம் திகதி அத்திபாரக்கல் நாட்டப்படவுள்ளது. கனடாவின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களின் நிதியுதவியுடன் இவ்வாலயம் கட்டப்படுகின்றது.

அதுபோன்று, மொன்றியல் ஸ்ரீதுர்க்கை அம்மன் ஆலயமும் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இதற்கும் பொதுமக்கள உதவி வேண்டப்படுகின்றது

# லண்டன் ஈழகேசரி சஞ்சிகை வடிவில் தற்போது வருகிறது

இங்கிலாந்து தேசத்தின் லண்டனிலிருந்து கடந்த இரண்டு வருடங்களாக, இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை என்ற முறையில் பத்திரிகை வடிவில் வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரி, கடந்த மாதத்திலிருந்து சஞ்சிகை வடிவில் வெளிவர ஆரம்பித்துள்ளது. புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழத்துப் பத்திரிகையாளர்களில் மூத்தவரான திரு. ஈ. கே. ராஜகோபால் இதன் ஆசிரியர். யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகை நிறுவனத்திலும், கொழும்பில் தினகரன் பத்திரிகையிலும் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் பணிபுரிந்த, நல்ல பத்திரிகைத் துறை அனுபவம் பெற்றிருந்த திரு. ராஜகோபால் அவர்கள், லண்டனில் 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியராக முதல் இரண்டு வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

லண்டன் ஈழகேசரியின் கனடா பதிப்பு தொடரந்தும் பத்திரிகை வடிவில் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை வெளிவந்துகொண்டிருக்கும். இதில் எந்த மாற்றமுமிருக்காது. பிரபல கவிஞரான தீவகம் இராஜலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வரும் கனடா ஈழகேசரி, இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. இங்கு வெளிவரும் பத்திரிகைகளில் தமிழீழக் கொள்கைக்கு ஆதரவாக வெளிவரும் பத்திரிகைகளில் இது முதன்மையானதாகும்.

சஞ்சிகை வடிவிலான முதலாவது லண்டன் ஈழகேசரி மொத்தம் 68 பக்கங்களைக் கொண்டது. முன் அட்டையானது, மலரப் போகும் தமிழீழத்தை முழுமையாகப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. தோற்றத்தில் ஓரளவுக்கு 'ரைம்ஸ்' சஞ்சிகையை கண்முன்னால் கொண்டு வருகின்றது.

பக்கங்களை மேலும் அதிகரித்து, தமிழர்கள் புலம்பெயர்ந்த நாட்டு விடயங்களை அந்தந்த நாடுகளில் வசிக்கும் ஈழத்துப் பிரமுகர்கள் ஊடாக எழுதுவித்துப் பிரசுரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக திரு. ராஜகோபால் தெரிவிக்கின்றார். இச்சஞ்சிகையின் பிரதியொன்றின் விலை கனடாவில் இரண்டரை டாலர்கள். தபாலில் பெறுவதானால் வருடமொன்றுக்கான கட்டணம் 40 டாலர்களாகும். ஆசிரியர் ராஜகோபால் கடந்த மாதம் இங்கு வந்திருந்த வேளையில் சுமார் நூறுக்கும் அதிகமானவர்கள் தங்கள் சந்தாப் பணத்தை அவரிடம் நேரில் செலுத்தியிருந்தனர்.

தபால் மூலம் பெற விரும்புபவர்கள் Eelakesari, 38 Moffat Road, London SW 17 17 Z என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி இலக்கம்: 0181 767 8004. கனடாவில் மாதாந்தம் பிரதி பெற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டியவர்: திரு. வேலாயுதம். தொலைபேசி இலக்கம்: 416 283 4546.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# 'சூரியன்' பத்திரிகையின் ஓராண்டு பூர்த்தி விழா


கனடாவில் கடந்த ஒரு வருடமாக வெளிவரும் 'சூரியன்' பத்திரிகையை வெளியிடும் 'லிங்க் மீடியா நிறுவன'த்தினர் 'சூரியன்' பத்திரிகையின் ஓராண்டு பூர்த்தியை ஒரு விழாவாக மண்டபம் நிறைந்த சனத்திரளின் மத்தியில் கொண்டாடினர். ஸ்காபரோவின் பாடசாலை மண்டபம் இதற்காக விழாக்கோலம் பூண்டிருந்தது. பத்திரிகையை ஆரம்பித்த வேளையில் அந்த நிறுவனத்தின் தலைவராகவிருந்த திரு. செந்தில்குமார் இரத்தினம் தலைமையில் விழா நிகழ்ந்தேறியது. பல்வேறு அரசியல் பிரமுகர்கள், அரசாங்க அதிகாரிகள், வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள், சமயப் பெரியார்கள், கலைஞர்கள் பலர் விழாவில் பல்வேறு உரைகளை நிகழ்த்தினர். பத்திரிகையின் ஆசிரியரான திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். எழுத்தாளர்கள் பலருக்கு விருதுகளும், கலைஞர்களுக்குச் சான்றிதழும் வழங்கப்பட்டது இவ்விழாவின் முக்கிய அம்சமாகும். திரு. செந்தில்குமார் இரத்தினம் தலைமையுரை நிகழ்த்துவதையும், புலவர் ஈழத்துச் சிவானந்தனிடமிருந்து கவிஞர் திருமாவளவன் விருது பெறுவதையும், ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவதையும் மேலுள்ள படங்களில் காணலாம். சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள், வணபிதா. செல்வரத்தினம் அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்குகின்றனர். செல்வி. சிவசுப்பிரமணியம், திரு. சின்னத்தம்பி வேலாயுதம், கவிஞர் அ. கந்தசாமி ஆகியோர் மேடையிலுள்ளனர். 'சங்கமம்' கலைஞர்களின் நாடகத்தில் ஒரு காட்சியையும், துள்ளிசைக்கான நடனத்தில் ஒரு காட்சியையும் இப்பக்கத்தின் கீழ்வரிசையில் பார்க்கலாம். வாராந்தப் பத்திரிகையை இலவசமாக வழங்கிவரும் வெளியீட்டாளர்கள், விழாவையும் இலவசமாக நிகழ்த்தியமை சிறப்பான பணியாகும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இங்கு பொய்ப்பற்களில் நோயாளிகளுக்கு ஏற்படும் சில குறைகள், அதிருப்திகள் பற்றி நோக்குவோம்

பல்கட்டிய சிலர் தமது பற்கள் திருப்திகரமாக அமையவில்லை என்று குறை கூறுவதை நாம் காண்கிறோம். பொய்ப்பற்கள் கட்டும் பொழுது எவ்வளவு கவனமும் அக்கறையும் எடுத்து உருவாக்கிய பொழுதும் வேறு காரணங்களால் அவை சிலரைத் திருப்திப்படுத்தத் தவறுகின்றன. அவற்றில் சில வருமாறு: நோயாளிகளின் எதிர்பார்ப்புகள் அதிகம் காரணமாகவும், அவர்களின் மனோநிலை, அவர்களின் வாயிலுள்ள இதரபற்களின் நிலை, பற்கள் பொருத்தப்பட்டுள்ள எலும்பின் அளவு, உதடு, நாக்கு என்ற வாயுறுப்புக்கள் படிவதற்கு ஏற்படும் காலம், இவர்களின் வயது, பற்கள் இல்லாது இருந்த கால இடைவேளை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

நல்ல அனுபவமும் ஆற்றலுமுடைய பல்வைத்தியர் கூட, பொய்ப்பற்களை எமது சொந்தப்பற்கள் போல் ஆக்கிவிட முடியாது என்பதை இவற்றைப் பெறுபவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எல்லாம் எமக்குச் சாதகமாக அமைந்தாலும் பொய்ப்பற்கள் எமது நிஜப் பற்களிலும் பார்க்க 25 சதவிகிதத்திலும் குறைவான ஆற்றலுடையவை என்ற இரகசியத்தை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

கண்பார்வையைக் கூட்டுவதற்கு கண்ணாடி போடுவதை இதற்கு ஒப்பிட முடியாது. பொய்ப்பற்கள் வாயினுள் ஒரு சிறு இயந்திரம் போல் இயங்குகின்றன. இந்த வாயினுள் நாக்கு, அண்ணாக்கு, பற்கள், உமிழ்நீர், முரசு, அதன்கீழ் எலும்பு என்பன இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மேலும் மேல்தாடை கீழ்த்தாடை இரண்டும் ஒருமித்து தாடைமூட்டின் உதவியுடன் இயங்க வேண்டியுள்ளது. இந்த விசித்திரமான அமைப்பு உடம்பில் வேறு எந்த இடத்திலும் இல்லை என்றே கூறவேண்டும்.

**பற்களைக் கட்டிக்கொள்பவர்களின் எதிர்பார்ப்புகள்**

ஒரு சிலர் தாம் பொய்ப்பற்கள் கட்டியவுடன் இதைப் பாவித்து நன்றாக உண்ணமுடியும் என்று எதிர்பார்க்கிறார்கள். அப்படி விரைவில் செய்ய முடியவில்லை என்றவுடன் மிகவும் ஏமாற்றம் அடைகிறார்கள்.

எனினும் நாளடைவில் அவற்றின் உபயோகம் அதிகமாவதை அவர்கள் உணர்வார்கள். ஆனாலும் ஒரு சிலருக்கு இதற்குப் பல காலங்கள் தாமதமாகலாம். அவருக்குத் தெரிந்த ஒருவருக்கு அவை நல்லாக அமைந்திருக்கிறதே எனக்கு மட்டும் ஏன் இந்த அவல நிலை என்று சிலர் கவலை கொள்கிறார்கள்.

சிலர் பொய்ப்பற்கள் பெற்றவுடன் மிகவும் உற்சாகமாகவும் ஆனந்தமாகவும் காணப்படுவார்கள். இனி தமக்கு உணவை அரைத்து உண்ண பிரச்சனையில்லை என்ற நம்பிக்கை கொள்கிறார்கள். இவர்களை நான் மீண்டும் சந்திக்கும் பொழுது தமக்குக் கிடைத்த பற்களால் தாம் பெரிதும் பயனடைவதாகவும் அதற்குத் தமது நன்றியையும் எம்மிடம் தெரிவித்துக் கொள்வார்கள்.

# பொய்ப்பற்கள்
# DENTURES

அதேவேளை ஒரு சிலரைத் திருப்திப்படுத்துவது மிகவும் சிரமமான விடயம் எனப் பல்வைத்தியர்கள் நினைக்கிறார்கள். இவர்கள் சதா குறை கூறுபவர்களாக இருப்பார்கள். தமது மனதில் தமக்குக் கொடுக்கப்பட்ட பற்கள் தமக்கு ஏற்றவையல்ல என்று அவர்கள் திடமாக எண்ணுகிறார்கள். அவற்றை ஏற்றுப் பாவித்துப் பழக முயற்சி எடுக்க வேண்டும் என்று பல்வைத்தியர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டுவார்கள்.

**COMPLETE DENTURE**

முழுமையான பொய்ப்பற்கள்

மேலும் கீழும் முற்றான கழட்டிப் பூட்டும் பொய்ப்பற்கள் போட்டிருப்பவர்களுக்கு பொதுவாக மேற்பற்களால் அல்லல் ஏற்படுவதில்லை. எனினும் மேல்தாடையிலுள்ள எலும்பு (ALVEOLAR RIDE) மிகவும் தட்டையாக கரைந்திருப்பின் மேல்தாடையிலுள்ள பொய்ப்பற்கள் சரியாகக் கவ்வுவதில்லை என்ற குறைபாட்டைக் கேட்டு வருகின்றோம்.

**டாக்டர். அ. சண்முகவடிவேல்**
**குடும்ப பல் வைத்தியர்**
**Family Dentist**

அதிகமாகக் கீழ்த்தாடைப் பொய்ப்பற்களால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. இந்தத்தாடையிலுள்ள எலும்பு குறைவாக இருப்பின் நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாகும்.

கீழ்த்தாடையில் ஒருசில உறுதியான பற்கள் இருப்பின் அவற்றைப் பேணுவது விரும்பத் தக்கதாகும். கீழ்த்தாடையிலுள்ள பற்களுடன் கொளுவக்கூடிய பொய்ப்பற்கள் கட்டுவதால் அவற்றை நோயாளிகள் இலகுவில் ஏற்று உபயோகித்துப் பயன் பெறலாம்.

**IMPLANT DENTURE**

எலும்புக் கரைவால் பொய்ப்பற்களை உபயோகிக்க முடியாதவர்களுக்கு IMPLANT DENTURES பெரிய உதவியாக இருக்கும். இவர்களின் தாடை எலும்புகளில் உலோகக் கம்பங்கள் பொருத்தப்பட்டு இக்கம்பங்களில் பொய்ப்பற்கள் பூட்டப்படுகின்றன. இத்தகைய சிகிச்சைகளுக்கு அதிக கட்டணம் அறவிடப்படுகின்றது.

**DENTURE ADHESIVES**

பொய்ப்பற்கள் நன்றாக கவ்விப் பிடிப்பதற்காக ஒரு சிலர் சில மருந்து வகைகளை பற்களில் போட்டுப் பாவிக்கின்றார்கள். இவற்றை "Denture adhesives" என்று கூறுகின்றோம். இவற்றில் பல ரகங்கள் மருந்துக் கடைகளில் கிடைக்கின்றன.

**DENTURE RELINING**

பல பற்கள் பிடுங்கியவுடன் பொய்ப்பற்கள் கட்டப்படின் சில மாதங்களின் பின்பு அவை தொள தொளக்க ஆரம்பிக்கின்றன. இதற்கு என்ன செய்யலாம்? இவர்கள் புதிதாகப் பற்களைக் கட்ட வேண்டியதில்லை. புதிதாகக் கட்ட மீண்டும் அதிக செலவு ஏற்படுகின்றது.

Denture relining செய்வதால் அவற்றை மீண்டும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவர முடியும். இப்படிச் செய்யும் பொழுது சுருங்கிய தசை இடைவெளிகள் அற்றுப் போகின்றன.

**PARTIAL DENTURE**

சில உறுதியான பற்கள் வாயில் இருப்பின், ஈடாடும் பற்களையும், நெடுத்த, உடைந்த பற்களையும் அகற்றி இல்லாத பற்களுக்கு செய்யப்படும் பொய்ப்பற்களையே Partial denture என்று சொல்கிறோம். ஒரு சில ஸ்திரமாகவும் உருப்படியாகவும் இருப்பின் அவற்றைப் பேணுவது உகந்ததாகும். நாளடைவில் அவற்றையும் நாம் இழக்க நேரிடும் என்று நாம் பயந்து அவற்றை அகற்ற வேண்டியதில்லை. எனினும் சிலர் எல்லாப் பற்களையும் அகற்றும்படி பல்வைத்தியர்களைக் கேட்கிறார்கள்.

வேறு சிலர் ஈடாடும் பற்களை அகற்ற விரும்புவதில்லை. ஒரு சில பற்களை அகற்றி விட்டு உள்ள பற்களுடன் கட்டும்படி வலியுறுத்துகிறார்கள். வேறு சிலர் உடைந்த துண்டுகளைப் பிடுங்குவதற்கும் தயக்கம் காட்டுகிறார்கள். இவர்களின் விருப்பப்படி கட்டப்படும் பற்களால் பிரயோசனம் ஏற்படப்போவதில்லை.

கீழ்த்தாடையில் போடப்படும் சிவந்த நிறமான பிளாஸ்டிக் (ACRYLIC) அடியையுடைய பற்களில் பல குறைபாடுகள் இருக்கின்றன. இவை உணவு உண்ணும் பொழுது முரசை அமுக்குகின்றன. இவை விலை குறைவானவை. சமூக உதவி பெறுபவர்களுக்கு இவ்வகையான பற்களுக்கே அரச உதவி கிடைக்கிறது.
(23ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'போர்ட்டலோ' இல்லாத விழாக்களே இன்று இல்லை!

கனடாவில் தமிழ்மகன் ஒருவரின் தொழிற்துணிவுக்கு உதாரணமாகத் திகழ்வது போர்ட்டலோ குளிர்பான உற்பத்தியாகும். திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவது தமிழரின் பாரம்பரியமெனினும், புலம்பெயர்ந்த நாடுகளில் நிரந்தரமாகத் தங்கித் தொழில் செய்வதே அவர்களின் இன்றுள்ள நிலைப்பாடாகும். புலம்பெயர்ந்த கனடிய மண்ணில், சொந்தமாக ஒரு உற்பத்தித் தொழில் செய்து பார்க்க முயற்சித்த தமிழ்மகன் ஒருவரின் அயராத முயற்சியின் விளைவே இந்த நிறுவனத்தின்தோற்றுவாய். ராஜ் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. இராஜதுரை அவர்களதும் அவரது துணைவியாரினதும் முயற்சியால் இன்று வளர்ச்சியடைந்து வரும் இவ்வுற்பத்தியானது, தமிழர்களை மட்டுமன்றி ஏனைய இனத்தினரையும் வியக்க வைத்துள்ளது.

1991 நவம்பர் 5ம் திகதி, நில அறையொன்றில் (basement) இதனது முதலாவது பரீட்சார்த்த முயற்சி ஆரம்பமாயிற்று. இது வெற்றியளித்தமை காரணமாகவும், தொடர்ந்து இது பற்றி செய்யப்பட்ட ஆய்வின் விளைவாகவும் 1992 மே மாதம் 8ம் திகதி தொடக்கம் சந்தைப்படுத்தக்கூடிய தொழில் முறையாக இது வளர்ச்சியடைந்தது. அப்போது ஒரேயொரு வகையான சுவையுடன் மட்டும் போர்ட்டலோ குளிர்பானம் தயாரானது. படிப்படியாக ஒரு வருடத்தின் பின்னர் ஐஸ்கிரீம் சோடாவும், அதன் பின்னர் இரண்டு லீட்டர் கொண்ட போத்தல் உற்பத்தியும் ஆரம்பமாயின. தற்போது இரண்டு லீட்டர் போத்தல்களில் போர்ட்டலோ சுவை, ஜிஞ்சர் சுவை, ஒறேஞ்ச் சுவை கொண்ட பானங்களும் சந்தைப்படுத்தப்படுகின்றன. இரண்டாண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற உற்பத்தியுடன் இன்றைய நிலையை ஒப்பிடுகையில் நிறுவனத்தின் வளர்ச்சியை மதிப்பிட முடியும்.

போர்ட்டலோ என்ற குளிர்பானம் இங்கிலாந்தில் 132 வருடங்களுக்கு முன்னர் அரம்பிக்கப்பெற்றது. இந்தப் பானம் மற்றைய சகல குளிர்பானங்களையும்விட தனித்துவமான சுவை கொண்டது. இதனால் துரிதகதியில் பல்வேறு நாடுகளிலும் பிரபல்யம் பெற்றது. காமன்வெல்த் நாடுகளில், குறிப்பாக- சிறிலங்கா, கயானா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இதன் விற்பனையும் பாவனையும் குறிப்பிடக்கூடிய அளவுக்கு உள்ளது. 'கோலா' பானங்களுடன் போட்டியிட்டு, அதேவேளையில் தனது தனித்துவச் சுவையுடன் நிலைபெற்று நிற்கும் பெருமையை போர்ட்டலோ பெற்றுள்ளது. பலவேறு புதிய குளிர்பானங்களையும் விஞ்சி நின்று புதிய அறிமுகம் பெறுவது இதன் தனித்துவமாகும்.

கனடாவில் நடைபெற்றுவரும் போர்ட்டலோ குளிர்பான உற்பத்தி, அதன் சிறப்பு, வளர்ச்சி பற்றி நோக்கின், தமிழர் ஒருவரின் புதிய தொழில் ஆர்வம், அறிமுகம், சுவை ஆய்வு. கடின உழைப்பு ஆகியவை எம் மனக்கண் முன்னால் வரும். புதிய சூழல், புதிய சமூக அமைப்புகளடங்கிய புதியதொரு நாட்டில், புதிதாக வந்து குடியேறிய ஒருவர் சந்தித்த சவால்களை அவர் வெற்றிகொண்ட வரலாறு இங்கு புலப்படும். மதுசாரம் அற்ற, கபின் அற்ற (non alcoholic and caffin free) தாக அமைந்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

இக்குளிர்பானத்தின் உற்பத்தி முறை பற்றிச் சிறிது நோக்குவோம். மெக்ஸிக்கோ நாட்டிலிருந்து இதற்கென வடிவமைக்கப்பட்ட போத்தல்கள் இறக்குமதி செய்யப்பட்டு உடனடியாக இங்கு சுத்திகரிக்கப்படுகின்றன. கனடிய சுகாதார அமைச்சின் அதிகாரிகளின் பரிசோதனையின் கீழ் விசேட முறையில் இச் சுத்திகரிப்பு இடம்பெறுகின்றது. இக்குளிர் பானத்துக்கான அடிப்படைப் பானம் இங்கிலாந்திலிருந்து வருகின்றது. அதனுடன் கனடிய ஊற்று நீர் சேர்க்கப்பட்டு போர்ட்டலோ தயாரிக்கப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு இருபது போத்தலுக்கும் ஒன்று என்றஅடிப்படையில் இலவசமாகப் பெறக்கூடியதாக ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் இதனைப் பார்த்து வாங்க வேண்டும்.

தமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு தமிழ் மக்களின் ஆதரவு தான் மூல காரணம் என்று மனந்திறந்து கூறுகிறார் திரு. இராஜதுரை அவர்கள். தமிழ் மக்களது விற்பனை நிலையங்கள், விழாக்கள், விருந்துபசாரங்கள் எங்கும் போர்ட்டலோ பானங்கள் விரும்பிப் பாவிக்கப்படுகின்றன. போர்ட்டலோ குளிர்பானமின்றி எமது மக்களின் நிகழ்ச்சிகளைக் காணமுடியாத அளவுக்கு இதன் உபயோகம் அதிகரித்து வருகின்றது. பல பாவனையாளர்கள் வாயாரப் பாராட்டுவதையும் நாம் கேட்கமுடிகின்றது.

போர்ட்டலோவின் வளர்ச்சியில் விளம்பர அமைப்புகளும் பெரும் பங்கு கொண்டுள்ளன. தமிழர்களின் விளம்பர சாதனங்களான தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிச் சேவைகள் ஆகியவை இதில் முக்கிய இடம்பெறுகின்றன. இதனால்தான் மாதமொன்றுக்கு 12,000 பெரிய அளவிலான போத்தல்களும், சிறிய அளவிலான 40,000 போத்தல்களும் விற்பனையாகின்றன. இந்தச் சாதனை தமிழர்களின் சர்வதேச முக்கியத்துவத்தினை மேலும் கூட்டுவதாக உள்ளது.

தொழிற் துணிவு, அயராத முயற்சி,

## தொழிற் துணிவுக்கு வெற்றி; புதுமுயற்சி திருவினையானது

இந்தத் தயாரிப்பு புதிய மெருகு பெற்றுள்ள இன்றைய நிலையில் அதன் 'லேபல்' வடிவமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படவுள்ளன. 'ஹரன் கிராப்ஸ்' என்னும் கம்பியுட்டர் நிறுவன உரிமையாளரான திரு. சசி பத்மநாதனின் புதிய வடிவமைப்பில் எதிர்கால 'லேபல்'கள் தயாராகி வருகின்றன. இவை மேலும் கவர்ச்சியளிப்பவையாக அமையவுள்ளன. இதன் அச்சுப் பதிப்புகளை றிப்ளக்ஸ் அச்சகம் கவனித்து வருகின்றது.

ஒன்ராறியோ தொழில் அமைச்சு, போர்ட்டலோ உற்பத்திக்காக திரு. இராஜதுரை அவர்களைப் பாராட்டி விருது வழங்கியுள்ளது. தற்போது போர்ட்டல்லோ தயாரிப்புகளை இங்குள்ள பல பாட-சாலைகளும் விரும்பி வாங்குவதன் மூலம் அதன் மதிப்பு அவதானிக்கப்படுகின்றது. இங்குள்ள பாடசாலை மாணவர்களினது விழாக்களிலும், மற்றும் பொது வைபவங்களிலும் கலை நிகழ்ச்சிகளிலும் போர்ட்டலோ முதன்மை இடம்பெற்று வருகின்றது. தேவை கருதி பல நிகழ்ச்சிகளில் இலவசமாகவும் வழங்கப்படுகின்றது. வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றது. திரு. இராஜதுரை அவர்கள் தமது வருவாயின் ஒரு பகுதியைச் சமூக வளர்ச்சிக்கும் அதன் உயர்ச்சிக்கும் ஆடம்பரமின்றி வழங்கி வருவது கவனிக்கப்பட வேண்டியது.

எதிர்காலப் பார்வை, சேவை மனப்பான்மை என்பவற்றை முன்னெடுத்துச் சென்ற ராஜ் தம்பதிகளின் முயற்சியானது இன்று தமிழர்களின் சொத்தாகி வருகின்றது. இதனால் எதிர்காலத்தில் பலருக்கு வேலைவாய்ப்புகளும் கிடைக்கவுள்ளன. விற்பனை நிலையங்களில் இவ்விற்பனை மூலம் பலர் பலனடைய முடிகின்றது. எமது மக்களின் பொருளாதாரப் பயனை நமது சமூகம் பெற்று முன்னேற இது வழிவகுத்துள்ளது.

உண்மையான உழைப்பும் நேர்மையும் கொண்ட ஒருவரது இவ்வுற்பத்தியை நாம் வரவேற்பதுடன், ஏனைய சமூகத்தினருக்கும் இதனை அறிமுகம் செய்ய முன்வர வேண்டும். எமது விழாக்களில் இப்பானத்தினைப் பாவிப்பது மட்டுமன்றி, எதிர்காலச் சந்ததிக்கும் இவ்வுணர்வினை ஊட்ட வேண்டும். பாராட்டும் உள்ளம் கொண்டவர்களாகவும், மற்றவர்களின் உண்மை உழைப்பினை நேசிக்கும் மனப்பான்மை உள்ளவர்களாகவும் நாம் மாறவேண்டும். இதனால் பல முயற்சிகளை நாம் ஊக்குவிக்க முடியும்.

**எஸ். பத்மநாதன்**
பி.ஏ. (ஆனர்ஸ்), கல்வி டிப்புளோமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒழுங்காட்சி செய்வதற்காக பிள்ளைகளுக்கு அடிக்கலாமா?

# IS SPANKING AN ACCEPTABLE FORM OF DISCIPLINE?

பொ. கனகசபாபதி
மகாஜனா முன்னாள் அதிபர்

சென்ற மாதம் முக்கியமான வழக்கு ஒன்று நடைபெற்றதை நீங்கள் பலர் அறிந்திருக்கலாம். டேவிட் பீற்றர்சன் என்ற ஒரு அமெரிக்கப் பிரஜை சென்ற வருடம் தொழிலாளர் தினத்தன்று, உணவு விடுதி ஒன்றின் முன் உள்ள வாகனத் தரிப்பு இடத்திலே படு பாதகச் செயல் ஒன்றினைச் செய்ததாக அவ்வழியே போன பெண்மணி ஒருவர் பதறித் துடித்து பொலிஸாருக்கு அறிவித்து விட, “ஆகுமோ இந்த அட்டுழியம்” என அவர்கள் கூறிக் கொண்டு ஓடிவந்து, அந்த மனிதனைக் கொண்டுபோய் ஒருநாள் அடைத்து வைத்த பின்னர் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கு இலண்டன் ஒன்ராறியோவிலே உள்ள ஒரு நீதி மன்றத்திலே நடைபெற்றது. அந்த மனிதர் அமெரிக்கப் பிரஜை. எனவே விரும்பியிருந்தால் வழக்கிற்கு வராமல் விட்டிருக்கலாம். அப்படிச் செய்திருந்தாரா னால் இனிமேல் கனடாவிற்கு வரும் வாய்ப்பினை இழந்திருப்பார். அவ்வளவே, சட்டப்படி சிறைத்தண்டனை கிடைக்கலாம் எனத் தெரிந்த போதும், அவர் தன்பக்கத் தில் நியாயம் உள்ளது, தன் செயல் குற்றமற்றது எனப் பூரணமாக நம்பியமை யால், வழக்காடித்தான் பார்ப்போமே என எண்ணித் துணிந்து கண்ணியமாய் நீதிமன்றம் புகுந்தார். வெற்றியும் பெற்றுள்ளார். நடந்ததுதான் என்ன?

அவரும் மனைவியும் இரு குழந்தைகளுமாக விடுமுறைக்காக அமெரிக்காவிலிருந்து கனடா வந்திருந்தார்கள். அன்று அவரது மனைவியின் பிறந்த தினம். உணவு விடுதி ஒன்றிலே மதிய உணவு உண்டுகொண்டிருந்தார்கள். மனைவிக்கு பிறந்தநாள் பரிசு வாங்கியிருந்தார். அது காருக்குள் இருந்தது. எனவே அதை எடுத்து வர இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு கார் இருந்த இடம் சென்றார். மூத்த பெண் குழந்தைக்கு ஐந்து வயது. இரண்டாவதற்கு மூன்று வயது. யார் எடுப்பதென்று பிள்ளைகளுக்குள்ளே போட்டி. பெரியது சின்னனை காருக்கு வெளியே தள்ளி விட்டது. மீண்டும் ஏற முனைய தடுத்து நின்றது. தந்தையார் எவ்வளவோ கேட்டும் சிரத்தை செய்யாமல், சின்னதை வெளியே தள்ளி அதன் நான்கு கை விரல்களும் நசியும் வண்ணம் காரின் கதவை அடித்துச் சாத்தியது. கோபமுற்ற தந்தை இது தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என்று அக்குழந்தைக்குக் கூறி, அதனை காரின் மேல் ஏற்றி அதன் உள் களிசானை அகற்றினார். தண்டனை பிஷ்டத்தில் (குண்டி) தருவதுவே அவரின் வழமை. அதனை அங்கீகரிக்காத பிள்ளை தனது கால்களால் தந்தையை உதைத்தது. தந்தையார் அதன் குண்டியில் ஏழு அடிகள் போட்டார். இதனைக் கண்ணுற்ற ஒரு வழிப்போக்குப் பெண்மணிதான் இது கனடாவில் அங்கீகரிக்கப்படாத குற்றம் என அலறித்துடித்து காவல் படையினருக்குச் செய்தி தெரிவித்தார்.

இப்படிப்பட்ட குற்றங்கள் நடந்தால் உடனே தண்டிக்கப்பட்டவரை மருத்துவ பரிசோதனை செய்வார்கள். இக் குழந்தையையும் பரிசோதித்துப் பார்த்தபொழுது, எந்தவித உள் வெளிக் காயங்களோ, சிராய்ப்புக்களோ, இரத்தக் கண்டல்களோ காணப்படவில்லை. சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க இளைஞன் ஒருவனுக்கு சிங்கப்பூரிலே சிங்கப்பூர் அரசு கசை அடி கொடுத்தது ஞாபகம் இருக்கலாம். அங்கே தெரு ஓரங்களிலே காணப்பட்ட கார்களின் மேல் காலித்தனமாக சிதைவு ஏற்படுத்தியதற்கே அத் தண்டனையை சிங்கப்பூர் அரசு தந்தது. அமெரிக்கா எவ்வளவோ வேண்டியும் தண்டனை நிறுத்தப்படவில்லை. அந்த இளைஞனுக்குக் கசையடி கிடைத்தமையால் உடற் பரப்பிலே காயம் ஏற்பட்டதுடன் உள்ளேயும் இரத்தம் கட்டிபட்டிருந்தது. இக் குழந்தைக்கு அத்தகைய பாதிப்பு ஒன்றும் ஏற்படவில்லை.

வழக்கினை விளக்கிய நீதிபதி டேவிட் பீற்றர்சன் நிரபராதி எனத் தீர்ப்பு வழங்கினார். சிறுமிக்கு அடிபட்ட இடங்களிலே காயமோ, கீறல்களோ காணப்படாமையால் சிறுமிக்கு அடிபட்டதனால் ஏற்படக்கூடிய உளப் பாதிப்பு மிக அற்பமானதும், தற்காலிகமானதுமாகவே இருக்கும் என்றும் கூறியுள்ளார். நீதிபதி சட்டநீதி, சமூகநீதி என்ற இரண்டிலே, சமூக நீதிப்படி தான் தீர்ப்பு வழங்குவதற்கு எந்த வித முத்தாய்ப்பும் இல்லை. எனக்கூறி சட்ட நீதிப்படி தான் அவரைச்சுற்றவாளி எனத் தீர்ப்பளிப்பதாகக் கூறினார். டேவிட் பீற்றர்சன் தம்பதியினர் தமது பிள்ளைகளை ஒழுங்காட்சி (DISCIPLINE) செய்கின்ற முறைகளையும் சிலாகித்துக் கூறியுள்ளார்.

1. பிள்ளைகளுக்கு மிகக் குறைந்த சந்தர்ப்பங்களிலேதான் அடிக்கிறார்கள்.
2. பிள்ளைகளுக்குப் பொதுவாகவே அடிப்பது அவர்களுக்குத் தீங்கு ஏற்படாமல் தடுப்பதற்காகவே.
3. அவர்கள் பிள்ளைகளுக்கு அடித்தால் உடனடியாகவே பெற்றோர்களில் ஒருவர் அல்லது இருவரும் பிள்ளையை அணைத்து முத்தமிட்டு அதன் பின்னர் ஏன் அடிக்கப்பட்டது என்பதைப் பிள்ளைக்கு நன்கு விளக்குவார்கள்.

பொதுவாக பீற்றர்சன் தம்பதியினர் பிள்ளைகளுக்கு அடிப்பதை ஒழுங்காட்சி செய்வதற்குரிய முதல்படியாக ஒருபோதும் நினைத்ததில்லை. முதற்படியாக பிள்ளையுடன் அவர் செய்கையின் குறைபாடுகள் பற்றி விளக்குவார்கள். அப்படி இனிமேல் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்வார்கள். இதற்கு அடுத்த கட்டம் பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும் சலுகைகள் (வீடியோ, தொலைக்காட்சி பார்த்தல்) நிறுத்துதல் அல்லது அவர்களைத் தனியே ஒரு இடத்திலிருந்து செய்த செயலைப் பற்றி சிந்திக்க வைத்தல். ஆக இறுதியாகத்தான் அடிக்கின்ற நிலைக்கு வருகின்றார்கள்.

இந்நிகழ்ச்சியை இவ்வளவு விபரமாக நான் எழுதுவதற்கு முக்கிய காரணம், நம்மவர்கள் சிலர் பிள்ளைகளுக்கு அடிப்பது பற்றிய தப்பான விளக்கம் கொண்டிருப்பதே. சென்ற வாரம் கூட ஒரு தாயார் “அங்கேயென்றால் நல்ல தட்டுத்தட்டி திருத்தியிருப்பேன், இங்கே ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறதே” என அங்கலாய்த்தார். இது அவரின் ஆற்றாமையைக் குறிக்கிறதா? அல்லது நழுவிச் செல்லும் வினைத்திறனா? நாங்களும் சாம, பேத, தான, தண்டம் என்றுதானே ஒழுங்காட்சியின் வெவ்வேறு படிகளைக் கூறுகிறோம். அங்கேயும் அடிப்பது கடைசி நிலை தானே. அப்படியென்றால், எமது பிள்ளைகளை வெறுமனே அடித்துத்தான் திருத்த வேண்டுமென்பதில்லையே. டேவிட் பீற்றர்சன் தம்பதியினர் கையாண்டது போன்ற பல நல்ல முறைகள் இருக்கவே செய்கின்றன. அவற்றினை பிரயோகிக்கலாம்தானே?

இது விஷயமாக முக்கிய குறிப்புக்கள் தரலாமென எண்ணுகிறேன். மேற்படி வழக்கு முடிந்த ஒரு சில நாட்களிலே ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகை கருத்துக் கணிப்பு ஒன்றினை நடத்தியது. அதில் 3768 பேர்கள் பங்குபற்றினார்கள். இவர்களில் 3,217 பேர்கள், பிள்ளைகளை ஒழுங்காட்சி செய்வதற்கு அடிப்பது அங்கீகரிக்கக்கூடியது என்றே கருத்து தெரிவித்துள்ளனர். 551 பேர்கள் மாத்திரம் இதனை எதிர்த்துள்ளனர். அப்படிப்பார்க்கின்ற பொழுது 85 வீதமானோர் அடிப்பதற்கு ஆதரவு தருவதாகவே கருத இடமுள்ளது.

மிக முக்கியமான விஷயம் பிள்ளைகளுக்கு அடிப்பதை குற்றவியல் சட்டமூலத்தின் 43வது பிரிவு அங்கீகரிக்கவே செய்கிறது. “பிள்ளையை நல்ல வழிப்படுத்துவதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள்,

(23ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விழாக்கள், வைபவங்கள், திருமணங்களில், காலத்துக்கு ஏற்ப மாற்றம் தேவை!

## சின்னையா சிவனேசன்

காலச்சக்கரம் சுழல்கிறது. மனிதன் அசுர வேகத்தில் முன்னேறிக்கொண்டிருக்கிறான். நமது இனம் நாடு நாடாகச் சென்று வாழ்க்கை அமைப்பதில் முன்னேறுகிறது. பணம் சம்பாதிப்பதில் முன்னேறுகிறது. ஆனால் சில பழக்க வழக்கங்களில் முன்னேற்றங் காணப்பட்டதாகத் தெரியவில்லை.

சுற்றாடலுக்கும் சூழலுக்கும் ஏற்ப வாழ்க்கையைச் செவ்வனே அமைத்துக் கொள்வதை இசைவாக்கம் (Adaptation) என்பர். இது பெரும்பாலும் மிருகங்களிடையே காணப்படும் ஒரு இயற்கையான செயற்பாடு. ஆனால் நம்மவரிற் சிலர் பழைய பழக்க வழக்கங்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கஷ்டப்படுவதுமல்லாமல், பிறரையும் கஷ்டத்துக்குள்ளாக்குகின்றனர். இலகுவான பல வழிகள், மாற்றீட்டு யோசனைகள் இருக்கும் போது ஏன் நாம் அவற்றைச் செயற்படுத்துவதுபற்றிச் சிந்திக்கவில்லை. இது ஒரு பெரும் கேள்விக் குறியாக உள்ளது.

ஒரு காலத்தில் குழாய் கட்டி (ஒலிபெருக்கி) கொண்டாட்டங்கள் நான்கு நாள்வரை நடத்திப் புகழ் பெற்ற இனம் எமது இனம். இங்கும் அதே பழக்கத்தில் ஒலிபெருக்கிப் பெட்டிகள் ஒன்பது பத்தை வைத்து பலமாகப் பாட்டுக்களைப் போட்டு, விழாவுக்கு வந்தவர்களின் காதுகளைச் செவிடாக்குவது மட்டுமல்லாமல், அயலவர்களின் நிம்மதியையும் கெடுப்பது விரும்பத்தக்கதல்ல. குறிப்பாகத் திருமணங்களின் போது போடப்படும் பாட்டுச் சத்தத்தை குறைப்பதற்கு, 911 க்குத் தொலைபேசி அழைப்புக்கள் போய் பொலிஸ்காரர் வருவதைத் தவிர்ப்பது நன்று. இதே நிலை வீடுகள், மாடிவீடுகள், தனியறைகளிலும் நிலவுவதைத் தவிர்க்க வேண்டும்.

சினிமாப் பாட்டென்றால் என்ன, சங்கீதம் என்றால் என்ன ஒரு குறிப்பிட்ட ஒலியில் வைத்துக் கேட்டால்தான் கூடியளவு ரசிக்கக்கூடியதாக இருக்கும். எதுவும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சாகி விடுவதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இதனால் பிற சமூகத்தவர்கள் எம்மைப் பண்பு குறைந்தவர்கள் எனக் கருதுவதற்கு இடமுண்டு.

அடுத்தது நாம் உரையாடுவதிலும் மாற்றம் தேவைப்படுகிறது. பொதுவாக நாம் பலமாக கதைத்து பழக்கப்பட்டவர்கள். பொது இடங்களில் ஒரு நண்பரையோ உறவினரையோ பார்த்து விட்டால் எமக்கு குஷி பிறந்து விடும். இதனால் நாம் எங்கிருக்கிறோம் என்பதையும் மறந்து "டேய் மச்சான் எப்படியடாப்பா உன் பாடு" என்று பலமாகப் பேச ஆரம்பித்து விடுகின்றோம். இது ஒரு நிலக்கீழ் வண்டிக்குள் இருக்கும் பலருக்கும் இடையூறாக இருக்குமே என்பதை உணர மறந்து விடுகிறோம்.

எனவே பொது இடங்களில் பேசுவதை மெதுவாகவும், அமைதியாகவும் பேசுவது உங்கள் பண்பாட்டையும் பிறரை மதிக்கும் நல்லொழுக்கத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமையும். இதே பழக்கத்தை உங்கள் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுங்கள். வீட்டிலும் இதைக் கடைப்பிடிப்பது நன்மை பயக்கும்.

அடுத்து கலை விழாக்கள், கோவில்கள், திருமணங்கள் போன்ற பொது நிகழ்ச்சிகளுக்குக் குழந்தைகளைக் கூட்டி வருவது. குறிப்பாக கலைவிழாக்களுக்கும், கோவில்களுக்கும் சிறார்களை அழைத்துவருவதில் ஏற்படும் நன்மை தீமைகளைப் பற்றி ஆராயலாம். கலை நிகழ்ச்சிகளுக்குப் பணம் கொடுத்து அங்கு நடைபெறுவதை ரசிப்பதற்கே எல்லோரும் வருகிறார்கள். சில மணிநேரம் நிம்மதியாக ஆனந்தமாகப் பொழுதைப் போக்கலாம் என வருகிறவர்கள் சிறுகைக்குழந்தைகளின் அழு குரல்களும், பலமாகச் சத்தம்போட்டு மண்டபத்தைச் சுற்றி ஓடிவரும் குழந்தை களும் இடைஞ்சலாக இருப்பதை விரும்ப மாட்டார்கள். அதுமட்டுமன்றி குழந்தை களுக்கும் அங்கு நடைபெறும் நிகழ்ச்சி களில் நாட்டமின்மையால் அலுப்புத்தட்ட ஆரம்பித்து விடுகிறது. இதனால் ஒருவருக்கும் பயன் ஏற்படுவதில்லை.

பிற சமூகத்தவர்களை நீங்கள் உற்று நோக்கினால் அவர்கள் இவற்றை எவ்வாறு சமாளிக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். பொது நிகழ்ச்சிகளுக்குப் பொதுவாக குழந்தைகளை அவர்கள் அழைத்துப் போவதில்லை. குறிப்பாக ஒரு கலை நிகழ்ச்சிக்குப் போவதாக இருந்தால் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு ஒரு உறவினரையோ அல்லது ஒரு பராமரிப்பவரையோ பணங்கொடுத்து ஒழுங்கு செய்வார்கள். இது குழந்தைகளுக்குஞ் சிறந்தது. பெற்றோர் கலைநிகழ்ச்சிகளை நன்கு ரசித்துப் பார்ப்பதற்கும், சிறுவர் வீட்டிலே தமக்குப் பிடித்தமான விளையாட்டுக்களை அல்லது நூல்களை வாசிப்பது, தொலைக்காட்சி பார்ப்பது போன்ற விருப்பமான செயல்களைச் செய்வதற்கும் இது வழிவகுக்கின்றது. இதனால் பணச்செலவு அதிகமாகுமே என்று பல பெற்றோர் அங்கலாய்க்கலாம். இதற்கும் ஒரு வழியுண்டு. கலைநிகழ்ச்சிகள் நடைபெறும் மண்டபத்திற்கு அருகாமையிலேயே ஒரு இடத்தை ஒழுங்கு செய்து பெற்றோர் எல்லோரும் தமது சிறு குழந்தைகளை அவ்விடத்தில் விட்டுச்செல்லக்கூடிய வழிவகைகளை பொது ஸ்தாபனங்கள் ஒழுங்கு செய்யலாம். இதற்கு மேற்பார்வை செய்ய மாணவர்களைக் குறைந்த கட்டணத்தில் ஒழுங்கு செய்யலாம். இதனால் இரு சாராருக்கும் நன்மை ஏற்படும். மாணவருக்குப் பிழைப்பாகவும், பெற்றோருக்கு மலிவான பராமரிப்பு நிலையமாகவும் அந்த இடம் விளங்கும்.

இதே ஒழுங்கினைக் கோவில்கள், பிற விழாக்கள் போன்றவற்றிக்கும் நாம் ஏற்பாடு செய்வது விரும்பத்தக்கது. இதனால் நமது எதிர்காலச் சந்ததியினரின் உளவியல் வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் நாம் உதவி செய்பவர்களாகின்றோம். ஓடி விளையாடும் குழந்தைகளை மூன்று மணித்தியாலங்களுக்கு அமைதியாக இருக்க நிந்திப்பது மகா கடினம். அத்துடன் இது குழந்தைக்கு உளவியல் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும். எனவே விழாக்காலம் ஆரம்பிக்கும் இந் நாட்களில் இதனைச் செயற்படுத்துவது நன்று.

நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்பவர்கள் சிற்றுண்டி வசதிகளை ஒழுங்கு செய்வது போன்று சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றையும் தற்காலிகமாக மண்டபத்திற்கு அருகிலேயே ஒழுங்கு செய்வது சிறப்பாக இருக்கும். எமது கலைவிழாக்களும், பொது விழாக்களும் பெரும்பாலும் பாடசாலைகளிலேயே நடைபெறுவதால் ஒரு வகுப்பறையை ஒரு தற்காலிக பராமரிப்பு நிலையமாக மாற்றுவதில் சிரமம் இருக்காது.

அடுத்த மிக முக்கியமான ஒரு விடயம், குறித்த நேரத்தில் ஒரு நிகழ்ச்சியை ஆரம்பிப்பது. குறிப்பாகத் திருமண விழாவைக் கவனிக்கலாம். மிகவும் சிரமப்பட்டு பணம்கொடுத்து ஒரு புரோகிதரையோ, சோதிடரையோ பார்த்து மிகச் சிறந்த நேரகாலத்தைக் கணிப்பித்து எடுத்து, அழைப்போலைகளிலும் அந்நேரத்தைக் குறித்து எல்லா ஒழுங்குகளையும் செய்து விட்டு திருமணத்தன்று மாங்கல்யம் பூணுதல் ஒரு மணித்தியாலம் அல்லது அரை மணித்தியாலம் கழித்தே நடைபெறுகிறது. பல நூற்றுக்கணக்கானோர் மண்டபத்தில் அமர்ந்திருந்து அலுப்பினால் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்க, மாப்பிள்ளை தாலி (23ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ‘தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்’ வெளியீடு; கடந்த மாத வரலாற்று வைபவம்

கனடாவில் கடந்த மாதம் இடம்பெற்ற வைபவங்களில் முதன்மையான வைபவமாகவும், ஓர் வரலாற்று விழாவாகவும் அமைந்திருந்தது ‘தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்’ (The Fall and Rise of The Tamil Nation) என்னும் நூலினது வெளியீட்டு விழாவாகும். தமிழீழத்தின் பழுத்த, மூத்த அரசியல் தலைவரும், தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர்களில் இன்று உயிருடன் வாழும் ஒரேயொருவரும், தமிழர் சுயாட்சிக் கழகத்தினது ஸ்தாபகரும், தீவுப்பகுதிக்கான முன்னாள் நாடாளுமன்றத்து உறுப்பினரும், பிரபல வழக்கறிஞருமான திரு. வ. நவரத்தினம் அவர்களால் எழுதப்பட்டது இந்த நூல்.

ஈழத்தமிழரின் கடந்த அரை நூற்றாண்டு காலத்து அரசியல் வாழ்க்கையை மிகத் தெளிவாகவும், உண்மையை உண்மையாகவும் கொண்டு எழுதப்பட்டது இந்த நூல். தெளிவான நடை, எவரும் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியதான தெரிந்தெடுத்த சொற்பதங்கள், ஒவ்வொரு காலப் பகுதிக்கும் தனியான அத்தியாயங்களாக 400 பக்கங்களுடன் ஆங்கிலத்தில் இது அமைந்துள்ளது.

விழாவின் முற்பகுதிக்கு திரு. சிறீகுகன் ஸ்ரீஸ்கந்தராசாவும், இடைவேளைக்குப் பின்னரான பகுதிக்கு சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரனும் தலைமை தாங்கினர். இந்த நூலை அறிமுகம் செய்து வைக்கும் பணியையும் திரு. மகேந்திரன் அவர்களே பொறுப்பெடுத்திருந்தார். தமிழரசுக் கட்சியின் இளைஞர் படையில் முன்னணியிலிருந்த திரு. எஸ்.கே. மகேந்திரன் அவர்கள், திரு. நவரத்தினம் அவர்கள் சுயாட்சிக் கழகத்தை ஸ்தாபித்த வேளையில் அவருடன் இணைந்து செயற்பட்டவர் என்னும் வகையில், அவரது உரை திரு. நவரத்தினம் அவர்களது அரசியல் கொள்கைகளை முழுமையாகத் தரிசிப்பதாக அமைந்திருந்தது.

‘திரு. நவரத்தினம் அவர்களது அரிச்சுவடியில் வளர்ந்தவன் நான். அவரது கொள்கைகள் எப்போதும் நேர்வழிப் பாதை கொண்டவை. பல வருடங்களின் பின்னர் அவரது தீர்க்கதரிசனத்தை நாம் உணர்ந்து கொள்ள முடிந்துள்ளது. தமிழினத்தை எப்போதும் எவருக்கும் விலை பேசி விற்க அனுமதிக்காத பெருந் தலைவன் அவர். தமிழீழத் தேசியத் தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள் பத்திரிகைப் பேட்டியொன்றில், ‘திரு. நவரத்தினம் அவர்களை எனது அரசியல் குருவாகக் கருதுகின்றேன்’ என்று குறிப்பிட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்” என்று திரு. எஸ். கே. மகேந்திரன் தமதுரையில் முக்கியமாகக் குறிப்பிட்டார்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன், திருமதி விமலா எட்வேர்ட்ஸ், சூரியன் ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம், திரு. ஏ. வேலுப்பிள்ளை, முன்னாள் விரிவுரையாளர் திரு. எஸ். பத்மநாதன், முன்னாள் குடிவரவு அதிகாரி திரு. டானியல் வூட்ஸ் ஆகியோர் வெவ்வேறு தலைப்புகளில் உரையாற்றினர். இவர்களில் ஓரிருவரது பேச்சுக்கள் நிகழ்ச்சி நிரலில் தவிர்க்கப்பட்டிருந்தால் விழா இறுக்கமானதாகவும் தரமானதாகவும் அமைந்திருக்கும் என்பது சபையோரின் கருத்து. புலவர் சிவானந்தன் அவர்கள் வழக்கம்போல நகைச்சுவை இழையோடவும், திரு. பத்மநாதன் அவர்கள் மிகவும் ஆழமாகவும் தங்கள் உரைகளை நிகழ்த்தியது கவனிக்கப்பட்டது.

திருமதி. பூமணி இராசரத்தினம் அவர்களது தமிழ்த்தாய் வணக்கத்துடன் விழா ஆரம்பமானது. கனடா வாழ் தமிழர்களின் தலைவராக மதிக்கப்படும் றிச்மன்ட்ஹில் இந்து ஆலய சபைத் தலைவர் திரு. என். சிவலிங்கம் அவர்களும் திருமதி ஜனனி சிவலிங்கம் அவர்களும் முதல் விளக்கை ஏற்றி விழாவைத் தொடக்கி வைத்தனர். நூலின் முதற் பிரதியையும் திரு. சிவலிங்கம் அவர்களே பெற்றுக் கொண்டார். அச்சமயம்

**உக்கிரன் பார்வையில்**

அவர் சிற்றுரை நிகழ்த்துகையில், பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் கனடா தமிழீழச் சங்கத்தை அமைத்து அதன் தலைவராகத் தாம் இருந்த வேளையில் இவ்வாறான நூலொன்றினை எழுதுமாறு திரு. நவரத்தினம் அவர்களிடம் தாம் வேண்டுகோள் விடுத்ததாகவும், அந்த வேண்டுகோள் இன்று நிறைவேறியுள்ளது தமக்கு மகிழ்ச்சியை அளிப்பதாகவும் சொன்னார்.

கனடாவில் வாழும் அதிமுத்த தமிழ்த் தம்பதியரான புங்குடுதீவு ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீபஞ்சாட்சர குருக்களும், அவரது தரமபத்தினியான விஜயலட்சுமி அம்மாளும் நூலாசிரியர் நவரத்தினம் தம்பதியினருக்கு மலர்மாலை சூட்டிக் கௌரவித்தது விழாவுக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்தது.

விழாவின் இறுதியில் திரு. நவரத்தினம் அவர்கள் பொன்னான உரையொன்றைத் தமிழில் ஆற்றினார். ” நாம் தமிழீழம் அமைக்கப்போகின்ற நாள் வெகுதூரத்தில் இல்லை. மிக அண்மையில் அது இருப்பதைக் காண முடிகின்றது. எங்கள் நாடு தமிழீழம் என்பதை மறந்து விடாதீர்கள். இன்று நீதியும், நியாயமும், சட்டமும், தர்மமும் விடுதலைப் புலிகளின் பக்கமும் அதன் தலைவர் பிரபாகரனின் பக்கமுமே உள்ளன. இப்போது உங்களிடமிருந்து தேவைப்படுவது ஒரு சிறு தள்ளு (Push) மட்டுமே. அதுவே இறுதித் தள்ளுதலாகவும் அமையலாம்” என்று அவர் கூறியபோது சபையோர் கரகோஷம் செய்து தங்கள் ஆர்வம் கலந்த மகிழ்வினைத் தெரிவித்தனர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், முன்னைய அரசாங்க தலைவர்கள் தமிழர் பிரச்சனை பற்றிக் கொண்டிருந்த பார்வையையும் கோடிட்டுக் காட்டினார். தமிழர்கள் படிப்புக்காகவும் வேலைக்காகவும் தான் போராடுகின்றார்கள்; வெளிநாடுக்கு ஓடுகின்றார்கள் என்ற தப்பபிப்பிராயம் பல வெளிநாடுகளில் இருப்பதைச் சுட்டிக்காட்டிய திரு. நவரத்தினம் அவர்கள், தமது நூல் அந்தத் தப்பபிப்பிராயத்தை நீக்கும் என்றும், இயலுமானவரை இந்த நூலை வெளிநாடுகளிலுள்ள நூலகங்களில் இடம்பெறச் செய்வது அனைவரதும் கடமை என்றும் தெரிவித்தார்.

கனடாவாழ் தமிழர்களுக்குத் தீர்க்க தரிசனம் நிரம்பிய எச்சரிக்கை ஒன்றினையும், அத்துடன் சேர்ந்த நல்ல ஆலோசனை ஒன்றினையும் அவர் வழங்கத் தவறவில்லை. அவ்வேளையில் அவரது பேச்சு பின்வருமாறு அமைந்திருந்தது:

“நாம் இப்போது வாழுகின்ற நாடு எங்கள் நாடல்ல. எங்கள் நாடு தமிழீழம். நாம் என்றோ ஒரு நாள் அங்கு சென்றேயாக வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள். எதிர்காலங்களில் என்ன நடைபெறும் என்று எவராலும் உறுதியாகக் கூறமுடியாது. இனத் துவேசம் எங்கும் தெரிகின்றது. ஜேர்மனியைப் பாருங்கள். நூறாண்டுகளாக அங்கு வாழ்ந்து வந்த துருக்கியர் தங்கள் நாட்டுக்குத் திரும்பும் நிலையேற்பட்டுள்ளது. எனவே எமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்துவோம். முன்னைய நாட்களில் செல்வந்தர்களின் பிள்ளைகளே வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பிருந்தது. இப்போது அந்த வாய்ப்பு எங்கள் பிள்ளைகளுக்கும் கிடைத்துள்ளது. இதனைப் பயன்படுத்தி அவர்களுக்கு நல்ல கல்வியைக் கொடுக்கத் தவறக்கூடாது. அத்துடன் எமது பணத்தை வீணாக விரயமாக்காது சேமித்து வைப்போம். மலரப் போகும் தமிழீழத்துக்கு இது பயன் படும்” என்று இந்த உரை அமைந்திருந்தது.

விழாவுக்கு வந்திருந்த ஒரு சில தமிழ் தெரியாதோரின் வசதிக்காக விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து சில வார்த்தைகளைத் திரு. நவரத்தினம் ஆங்கிலத்திலும் நிகழ்த்தினார். ஆனால், விழாவின் முற்பகுதிக்குத் தலைமை வகித்த ஸ்ரீகுகன் ஸ்ரீஸ்கந்தராசா மறந்தும்கூட ஒரு வார்த்தையாயினும் தமிழில் பேசாதது பெருங்குறையாகவே இருந்தது. முக்கியமாக, நவரத்தினம் தம்பதிகளுக்கு மலர்மாலை சூட்ட அந்தணப் பெருமக்களையும் ஆங்கிலத்திலேயே அவர் அழைத்தபோது சபையோர் பலரும் ‘நெளிந்து’ கொண்டனர். நூலாசிரியரின் மருமகளான வழக்கறிஞர் திருமதி. தெய்வா மோகன் அனைவருக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# வரலாற்று விழாவின் சில காட்சிகள் இங்கே!

'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' வெளியீட்டு விழாவின்போது எடுக்கப்பட்ட சில படங்கள் இவை. திருமதி. பூமணி இராசரத்தினம் தமிழ் வாழ்த்துப் பாடுவதையும், சிவலிங்கம் தம்பதியினர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதினையும், ஸ்ரீகுகன் ஸ்ரீஸ்கந்தராசா தலைமையுரை ஆற்றுவதையும், சிவஸ்ரீ பஞ்சாட்சர குருக்கள் தம்பதிகள் நூலாசிரியர் தம்பதிகளுக்கு மலர்மாலை சூட்டி வாழ்த்துவதையும், நூலாசிரியர் பதிலுரை நிகழ்த்துவதையும், வழக்கறிஞர் தெய்வா மோகன் நன்றி தெரிவித்துப் பேசுவதையும், கடைசிப் படத்தில் நூலாசிரியர் தம்பதிகள் தமது மகனான பிரபல வழக்கறிஞர் ஜெகன் மோகன் தம்பதிகளுடனும் பேரனுடனும் நிற்பதையும் காணலாம்.

**படங்கள்: 'ஜூபிட்டர்' நவா**



















தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# LAW OFFICE

**OFFICES**

**NEW LOCATION**

**SCARBOROUGH**
2555 Eglinton Ave. E.,
Suite 204
Scarborough,
Ontario
M1K 5J1
(Midland & Eglinton)
Fax: (416) 265-2770

**Tel: (416) 265-3456**

**TORONTO**
2 Carlton Street,
Suite 1704
Toronto, Ontario
M5B 1J3
(College Subway /
College & Yonge)
Tel: (416) 977-1071

## யசோ சின்னத்துரை

பரிஸ்டர், சொலிசிற்றர் & நொத்தாரிஸ்

- வீடு வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை, ஈடுவைப்பு / மீட்டல்
- குடிவரவு அகதி விசாரணை
- குடும்ப விவகார சட்ட உதவி, பிரதிநிதித்துவம்
- வர்த்தக நிலைய பதிவுகள்
- உயில், உயிருயில்[Living Will], தத்துவப் பத்திரங்கள் தயாரித்து அத்தாட்சிப் படுத்துதல்
- சத்தியப் பத்திரம் தயாரித்து அத்தாட்சிப் படுத்துதல்
- தொழில் காப்புறுதி மேன்முறையீடு

மற்றும் பொதுத் தேவைகளுக்கான
சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும்

**YASO SINNADURAI**
Barrister & Solicitor, Notary Public

# தமிழன் வழிகாட்டி

தமிழ் மக்கள் மத்தியில் நடைபெறும் சகல தகவல்களிற்கும் தமிழன் வழிகாட்டியின்
இலவச தொலைபேசித் தொகுப்பினை நாடுங்கள்




தொலைபேசித்தொகுப்பின் (416) 289-8900
அழுத்தியபின் உங்கள் தேவைகளிற்கு அழுத்த
வேண்டிய பிரதான இணைப்பு இலக்கங்கள்

- விளம்பர அகராதி - 1111
- ஆலயம் - 2222
- நகர்வலம் - 3333
- சினிமா - 4444
- மீடியா - 5555
- மலிவு விற்பனை - 6666
- நியூ இமிகிரன்ஸ் - 7777
- உலக வலம் - 8888
- ஆதவன் பப்ளிக்கேசன்ஸ் - 9999

வருடத்தின் 365 நாட்களிலும், 24 மணிநேரமும்
உங்கள் விளம்பரங்கள் மக்களிற்கு இலவசமாக சென்றடைய
தொடர்பு கொள்ளுங்கள்

ஆதவன் பப்ளிகேசன்ஸ்: **TEL: (416) 724-6402**
**FAX: (416) 724-2023**

www.tamilarangam.net



# ஆனி 8 ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில்

# வாக்களிப்பதற்கு


## உங்கள் பெயர்

## புதிய வாக்காளர் பட்டியலில்

## அல்லது

## வாக்களிக்கும் உறுதிப் பத்திரத்தில்

புள்ளி விபரம் சேகரிப்பவர்களிடமிருந்து பாரம் 301 <u>கிடைக்கப் பெறாவிடின்</u> உங்கள் பெயர் புதிய வாக்காளர் பட்டியலில் <u>இல்லை.</u> காத்திருக்காது இப்பொழுதே அழையுங்கள்! ஆனி 7ம் திகதிக்கு முன் வாக்காளர் உறுதிப்பத்திரம் பெறுவது உங்களைப் பொறுத்தது.




## ஆனி 8 நீங்கள் வாக்களிக்க முடியுமா?

வாக்களிப்பதற்கு, நீங்கள்...

- தேர்தல் நாளில் 18 அல்லது மேலான வயதுடையவர்
- வாக்களிக்கும் நேரத்தில் கனேடிய பிரஜை, அத்துடன்
- கடந்த 6 மாத காலத்தில் ஒன்ராறியோவில் வசித்தவர்

உங்கள் பெயர் புதிய வாக்காளர் பட்டியலில் அல்லது நீங்கள் வசிக்கும் தேர்தல் மாவட்ட வாக்காளர் உறுதிச் சீட்டில் இருந்தால் வாக்களிக்கத் தகுதியுண்டு.

## இப்பொழுதே அழையுங்கள்

**வாக்களிக்கும் உறுதிப் பத்திரம் எப்படிப் பெறுவது என்ற விபரம் அறிவதற்கு.**

தேர்தல் அதிகாரிகளின் தொலைபேசி எண்கள் தொலைபேசி இயக்குனரின் உதவியுடன் பெற்றுக் கொள்ளலாம்.உங்கள் தேர்தல் மாவட்டத்தையிட்டு தகவல் தேவையாயின் "தேர்தல்கள் ஒன்ராறியோ" என சொல்லி பின் தேர்தல் மாவட்ட பெயரை சொல்லவும்

தேர்தல் பற்றிய பொது விபர அழைப்பு,
ரொறன்ரோவும் அதைச் சார்ந்த பகுதிகட்கும்
(416) 754-8683
ரொறன்ரோவிற்கு வெளியில்
1-800-668-2727

கிராமியப்பகுதிகளில் நீங்கள் வாக்களிக்கத் தகுதியுடையவராயின், உறுதி படுத்தப்படுவீர், இருந்தும் வாக்களிக்கும் உறுதிப் பத்திரத்தைப் பெற விரும்பினால் தகவல் பெறும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு தகவல் பெறலாம்.

வாசிக்கத் தெரியாத நண்பர்களோ உறவினரோ உங்களுக்கிருப்பின், இப் பிரசுரத்திலுள்ள தகவலை அவர்களுக்கு அறியத்தரவும்.

**Elections Ontario**

சட்ட நிரூபண சபையின் சார்பற்ற ஸ்தாபனம்
உங்களுக்கு தகவல் வழங்குகின்றோம்

ஒன்ராறியோவின் பிரதான தேர்தல் அதிகாரியின் காரியாலயத்தினால் பிரசுரிக்கப்பட்டது.
வாறன். ஆர். பெய்லி பிரதான தேர்தல் அதிகாரி

R/36



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமசம்பளச் சட்டத்தினால் பெண்களுக்கு நன்மை

# Thousands of women benefit from Pay Equity

ஒன்ராறியோ மாகாண அரசாங்கத்தினால் கடந்த ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட முக்கியமான சில சட்டங்களில் ஒன்று Pay Equity எனப்படும் சமசம்பளச் சட்டமாகும். பாரபட்சமான சம்பளம் பெற்றுவந்த பல நூற்றுக்கணக்கான பெண்கள் இதனால் சம்பள உயர்வு பெற்றுப் பயனடைந்துள்ளனர். கூடுதலான பெண்கள் வேலைவாய்ப்பினைப் பெறவும் இச்சட்டம் கைகொடுத்துள்ளது. இது பற்றி மாகாண தொழில் அமைச்சு விடுத்துள்ள அறிக்கை இங்கு முழுமையாகத் தரப்படுகின்றது.

Have you ever asked yourself how much more your employer would pay a man to do your job? Most women have.

Over the years, jobs done mainly by women, such as clerical jobs, nursing and child care, have been under valued compared to jobs done mainly by men, such as custodial. construction and manufacturing jobs. In fact, women are paid one-quarter less to do a job of equal value.

Part of the reason is that skills to do "women's work" were seen as "natural" to women and not as important as "learned" skills. Also, women were viewed as second income earners. That's not only unfair, it's now against the law.

Under the *Pay Equity Act*, employers have to evaluate all jobs to determine their overall value to the organisation. A job's value is based both on the levels of skill, effort and responsibility that the job requires and on its working conditions. If a woman is paid less than a man for doing a job of equal value to his, the woman's pay must be raised to match the man's. Naturally, men that worrk in jobs done mainly by women, such as nursing, also get the increase.

"Thousands of women benefit from pay equity, which became law in 1988"' says Angella Ferrara, information counsellor on the Pay Equity Commission's public hotline.

For example, in an Ontario food manufacturing plant the employer determined that the secretary to the manager was worth the same to the company as the job of the receiving supervisor, which was usually done by a man. The secretary's pay equity increase was $1.11 an hour. A second example took place in a hospital where the female ambulance co-ordinator's and electrician's jobs were compared, resulting in an increase of $1.06 an hour for the co-ordinator.

"We also heard from a mental health worker in another hospital whose job was compared to the male personnel officer's. She got an increase of $2.20 of hour", says Angella Ferrara. "And in a supermarket chain, female cashier and meat wrapper jobs were compared to a male stock clerk's and received a pay equity adjustment of $1,477 a year."

Job evaluation has been used to assess managerial jobs for many years. Pay equity requires that all the jobs be evaluated, regardless of their level.

"What surprises a lot of employees and employers when they break jobs down is how much 'women's work' has been discounted", says independent pay equity consultant Ann Hawkins. "People also forget that women's job often have difficult working conditions, such as sitting for prolonged periods in front of computer terminals of sewing machines. job titles can also lead to false assumptions about the value of jobs. For example, while 'administrative assistant' does not sound as impressive as 'manager', an administrative assistant's job can involve a great deal of responsibility."

Do you have any questions about pay equity? call toll-free: 1-800-387-8813 or, in Toronto: 416-481-3314.

Pamphlets and seminars that take employers through the process are also available at no charge.

# தமிழரின் கொலையைத் துப்புத்துலக்க தமிழரின் உதவியை பொலிஸார் கோருகின்றனர்

நயாகரா பொலிஸ் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட சடலம் ஒன்று, இலங்கையரான சின்னையா ராஜன் மமன்கரன் என்பவருடை யது என்ற முடிவின் அடிப்படையில் இவரது மரணம் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் நடவடிக்கையில் நயாகரா பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இவ்விடயத்தில் தமிழர்களின் ஒத்துழைப்புத் தேவை என்று இங்குள்ள சகல வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்கும் கடந்த மாதம் 24ம் திகதி பொலிஸாரால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் விபரம் வருமாறு:

"நயாகரா பகுதியிலுள்ள பீம்ஸ்வில் என்ற பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆணின் சடலம் ஒன்று தொடர்பான விசாரணைகளை நயாகரா பிரதேசப் பொலிஸார் 1994 ஜுலை 29ம் திகதி ஆரம்பித்தனர். கம்பியுட்டர் மூலம் வரையப்பட்ட படங்கள் மூலம் சடலத்தை அடையாளம் காண நடவடிக்கைகள் எடுக் கப்பட்டன. உலகெங்குமுள்ள தொடர்புச் சாதனங்களுக்கும் சர்வதேச பொலிஸார் ஊடாகப் படங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. முப்பது வயதுடையவரான சின்னையா ராஜன் மமன்கரன் என்பவரது சடலமே இது என்று ஓரளவுக்கு இப்போது அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையரான இவர் 1990ம் ஆண்டு கனடாவுக்கு வந்த பின்னர், ரொறன்ரோ பெருநகரின் பல பகுதிகளிலும் வசித்துள்ளார். இவரது மனைவியும் எழு வயது மகனும் இலங்கையில் வசிக்கின்றனர். இவரது மனைவிக்கு விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் நடத்தி வந்த பழுதுபார்க்கும் நிலையம் மிஸிஸாகாவின் 6160 நெதர்ஹார்ட் வீதியில், 5ம் இலக்கத்தில் இயங்கி வந்தது. இவர் காணாமல் போனது 1994 ஆகஸ்ட் 6ம் திகதியாகும். இவரது மரணத்துக்கான காரணங்களை பொலிஸார் வெளியிட விரும்பவில்லை. விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதுதொடர்பாக இலங்கையர்களுடன், முக்கியமாகத் தமிழர்களுடன் தொடர்பு கொள்ள பொலிஸார் விரும்புகின்றனர். கொல்லப்பட்டவரின் நண்பர்கள், உறவினர்களுடன் பேசுவதற்கும் பொலிஸார் விரும்புகின்றனர். விபரங்கள் தரவிரும்புவோர் நயாகரா பிரதேச பொலிஸின் Major Crime Unit உடன் 1-800-668-3911 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# VOYAGES **NORKO** INTERNATIONAL **TRAVEL**

IATA MEMBER

COMPETITIVE AIR FARES * VARIETY OF AIRLINES * WORLDWIDE DESTINATIONS

We are specialized in organaising grop tour enjoy your summer vaccation in FLORIDA. (V.S.A)

Sri Lankan tamil owns 'Colonial Motor Lodge' will provide every thing the way you live in home.



உங்கள் விமானப் பயணங்களையும், சுற்றுலாக்களையும் நீங்கள் விரும்பியவாறு கவனித்து உதவுவதற்கு காத்திருக்கிறார்

உங்கள் நண்பர்

கே. ரி. சண்முகராஜா (சண்)

**1234 Rue Stanley, Montreal (Q.P)**
**H3B 2S7 (near peel metro)**

***Tel: (514) 871-8799***
***Fax: (514) 871-0148***

---

# ரோஜா

கலை, இலக்கிய மாத மலர்

- ★ தமிழீழம் 1998இல்
- ★ ஒன்ராரியா மாகாணத்தின் புதிய ஆட்சி
- ★ தமிழீழத்தில் மூன்றாம் கட்டப்போர்
- ★ இலக்கிய உறவுகள்
- ★ ராசுக்குட்டி அப்பா
- ★ இளைஞர் அணி - சிறுகதை
- ★ நெஞ்சங்கள் - தொடர்கதை

மற்றும் சினிமா, சந்திப்பு, சிறுவர் பூங்கா, சொற் சிலம்பம் போன்ற பல சுவையான அம்சங்களுடன்

**இம்மாதம் 15ம் திகதி வெளிவருகிறது!**

கதை, கவிதை, கட்டுரை போன்ற ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு: **(416) 425-2884**

---

'ரோஜா', 'இளைய நிலா', 'கரன்கிறாப்' இணைந்து
திருமலை அன்பு இல்லம் நிதிக்காக
கனடா தமிழர் மத்தியில் நடத்தப்பெறும்

# அன்பரங்கம்

தமிழ்க் கலைஞர் விழா

**152 அநாதைச் சிறாரின் தொடர்வாழ்வுக்கு உங்கள் இதயக் கதவுகளைத் திறவுங்கள்!**

1995 ஜூலை 15 சனிக்கிழமை
பிற்பகல் 6.30 மணி முதல்
வின்சன்ட் சேர்ச்கில் கல்லூரி அரங்கில்

தொடர்புகளுக்கு:~
(416) 425-2884, (905) 472-6976,
(905) 277-8613



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விழாக்கள், வைபவங்கள்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டும் நேரத்திற்குத்தான் வீட்டிலிருந்து புறப்படுவார். அந்நேரத்தில்தான் வீடியோபடப் பிடிப்புக்காரரோ, மாலையோ வரவில்லை என்ற ஞானம் எல்லோருக்கும் பிறக்கும். உடனே மாப்பிள்ளையை அமரச் செய்து படப்பிடிப்பாளரைத் தேடி ஓடுவர் சிலர். இதிலிருந்து நமக்குப் புலனாவது என்ன?. காரியங்கள் திட்டமிடப்பட்டிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. எதையும் திட்டமிட்டே செய்ய வேண்டும் என்பதை எம்மில் பலர் மறந்து விடுகிறோம். கிறிஸ்தவர் தமது திருமணங்களை எவ்வளவு அருமையாகவும் அழகாகவும் நிமிடம் பிசகாமல் யாவற்றையும் விஞ்ஞான நிகழ்வு போன்று நடத்துகிறார்கள் என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. 2 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பம் என்றால்1.50க்கு பெண்வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் வந்து அமர்ந்து கொள்வார்கள். அதற்கு முன்னர் அழைப்புப் பெற்றவர்கள் வர வர அவர்களது இருப்பிடங்களைக் காண்பிப்பதற்கு வாலிபர்களும் வனிதையரும் வாசலில் காத்து நிற்பார்கள். பெண்வீட்டார் ஒரு பகுதியிலும் ஆண்வீட்டார் மறு பகுதியிலும் அமர்த்தப்படுகிறார்கள். பார்க்க அழகாகவும், அமைதியாகவும், புனிதமாகவும் இருக்கிறது. குறித்த நேரத்திற்கு சமயக் குரவர் மேடைக்கு வருகிறார். அதன்பின் மாப்பிள்ளை தோழர் சகிதம் வர எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். அதன்பின்னால் தோழியர் சகிதம் மணப்பெண் வருகிறாள். யாவும் அழகாகவும், அமைதியாகவும் நடைபெறுகிறது. நிகழ்ச்சிகள் யாவும் முக்கால் மணி நேரத்திற்குள் முடிந்துவிடும். பரிசு வழங்கல், வாழ்த்துத் தெரிவித்தல் யாவும் கோவிலுக்கு வெளியே நடைபெறும்.

இதனால் நாமும் இதனைப் பின்பற்ற வேண்டும் என்று நான் கூறவில்லை. யாவையும் திட்டமிட்டு அழகாகவும் குறித்த நேரத்திற்கும் செய்ய வேண்டும் என்பதையே வலியுறுத்த விரும்புகின்றேன்.

நேரம் பொன்னானது ஆயிரம் பேருள் ஒரு நிகழ்ச்சி ஒரு மணித்தியாலம் தாமதித்து ஆரம்பித்தால் ஆயிரம் மணித்தியாலங்கள் வீணாகி விட்டன என்று அர்த்தம். ஆகக்குறைந்த சம்பள அடிப்படையில் ஆயிரத்து ஐந்நூறு டொலர் நட்டம். இதனை நாம் நன்கு சிந்திக்க வேண்டும். இவ்வாறே பிற நிகழ்ச்சிகளையும் குறித்த நேரத்தில் ஆரம்பித்து குறித்த நேரத்தில் முடிப்பது மிகவும் அவசியம். இது பெரும்பாலும் நன்கு திட்டமிடப்பட்டு செய்யப்பட்டால் பிரச்சனை இராது.

விழாக்களை ஒழுங்கு செய்பவர்கள், பலருடைய ஒத்துழைப்போடு வேலைகளை பங்கிட்டுச் செய்தால் சிரமமின்றி யாவற்றையும் கச்சிதமாகச் செய்யலாம். இது பெரும்பாலும் அனுபவத்தினால் ஏற்படுவது. நிகழ்ச்சிக்கு ஒரு மாதத்துக்கு முன்னதாகவே யாவையும் ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டும். இதில் நம்மவர் கூடிய கவனம் செலுத்துதல் முக்கியம்.

ஏதோ மனதில் எழுந்த எண்ணங்களை எழுத்தில் தந்திருக்கிறேன். இதனால் நன்மைகள் ஏற்படும் எனக் கருதுகிறேன். சமுதாய முன்னேற்றத்துக்கு இக்கருத்துக்கள் கருவியாக அமையுமானால் யாவருக்கும் மகிழ்ச்சியே.

## பிள்ளைகளுக்கு அடிக்கலாமா?

(14ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாவலர்கள் ஓரளவு வன்முறை உபயோகிக்கலாம்" எனச் சட்டமூலம் கூறுகிறது. இன்னும் சொல்லப்போனால் பிள்ளைகளைத் தவிர்ந்த ஏனைய எவரிலும் வன்முறை பாவிப்பின் அது தண்டனைக்குரிய குற்றமாகவே கருதப்படும். இச்சட்ட மூலத்தின் உதவியால் பல பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு அடித்தமைக்காக கோடேற்றப் பட்டபின்னர் தப்பியிருக்கிறார்கள். டேவிட் பீற்றர்சன் வழக்குக்குப் பிறகு இச்சட்ட மூலப் பிரிவு அகற்றப்படவேண்டுமெனச் சில குழந்தை பாதுகாப்பு இயக்கங்கள் மத்திய அரசின் நீதியமைச்சர் அலன் றொக்கினைக் கேட்டபொழுது அவர் அதற்கு உடன்படவில்லை. பெற்றோர்கள் பொதுவாகவே நியாயமான முறையிலும், கண்ணியமான முறையிலும் மாத்திரமே பிள்ளைகளைத் தண்டிக்கிறார்கள். ஆகவே இச்சட்டமூலப் பிரிவினை அகற்ற வேண்டிய அவசியம் இல்லையென அலன் றொக் கூறி விட்டார். ஆகவே பிள்ளைகளுக்கு அடிப்பது குற்றமல்ல. ஆனால் எப்படி அடிக்கப்படுகிறது? எதற்காக அடிக்கப்படுகிறது? என்பதே முக்கியம். பிள்ளைகளை ஒழுங்காட்சி செய்வதற்காக அடிப்பது ஒருவகை, அவர்கள் செயலால் கோபமுற்று அதன் பிரதிபலிப்பால் அவர்களை அடிப்பது இன்னொருவகை.

பிள்ளைகளை ஒழுங்காட்சி செய்வதற்காக அடிப்பதாயிருந்தால் எடுத்த உடனடியாகவே பிள்ளைகளுக்கு அடிக்க மாட்டோம். பீற்றர்சன் தம்பதியினர் கையாண்டது போன்ற பல்வேறு மாற்று வழிகளைப் பிரயோகித்து அவையாவும் வெற்றியீட்டாத பட்சத்திலே வேறு வழியே இல்லை என்ற தீர்மானத்துடன் அடிப்போம். அங்கே குரோத உணர்வே இருக்க மாட்டாது. இன்னும் சொல்லப் போனால் இங்கு பாதிக்கப்பட்டது பிள்ளையிலும் கூடுதலாக பொற்றோராகவே இருக்கும். "பிள்ளைக்கு அடித்து விட்டேனே என அவர்கள் மனம் வெதும்பும் அல்லல்படும். எனவே எவ்வளவு விரைவாக பிள்ளையை அணைத்து நடந்தவற்றை மறக்க வைக்க முனைவர். பிள்ளைக்கு ஏன் தாங்கள் அடித்தோம் என்பதையும் விளக்க முனைவர். இது பிள்ளையின் மனதிலே நல்ல உணர்வுகளை தோற்றுவிக்கக்கூடியதாக அமையும்.

பொதுவாகவே நம்மவரில் பலர் இரண்டாவது வகையினையே கையாளுகின்றோம். பிள்ளைகளின் செயலால் கோபமுற்று அதன் பிரதிபலிப்பாக உடனடியாகவே வன்முறையில் ஈடுபட்டு விடுகின்றோம். இங்கு அடிப்பது பிள்ளையைத் திருத்துவது என்பதிலும் பார்க்கக் கோபத்தின் வடிகாலாகிறது என்று கூறுவதே சிறந்தது. இதனைச் சட்டம் அங்கீகரிக்கமாட்டாது. இத்தகைய சந்தர்ப்பங்களிலே அடிபடுகின்ற பிள்ளையின் உடலிலே காயங்களோ, சிராய்ப்புக்களோ, இரத்தக்கண்டலடைவது போன்ற இரத்தக்காயங்கள் ஏற்படுவது சாத்தியம். எமது கோபமும் உடனடியாகத் தணிவதில்லை. எனவே இத்தண்டனை முறை பிள்ளைகளுக்கு உடலிலே ஏற்படுத்திய உடல் வடுவிலும் பார்க்க மிக்க தீர்க்கமான ஒரு வடுவினை உள்ளத்திலே ஏற்படுத்தி விட்டிருக்கும். உடலில் ஏற்பட்ட வடு ஒரு சில நாட்களில் மறைந்துவிடும். உள்ளத்தில் ஏற்பட்ட வடுவோ மறைய எத்தனையோ நாட்கள் ஏன் வருடங்கள் கூட எடுக்கலாம். அல்லது அவர் உள்ளத்திலே நிலையான வடுவாகவே நிலைத்து நிற்கலாம். அதன் பிரதிபலிப்பு விரும்பத்தகாத பல விளைவுகளை ஏற்படுத்தும். அவர் ஒரு அடாவடித்தன்மையுடையவராகவோ, வன்முறையிலே அதீத நம்பிக்கையுடையவராகவோ வரலாம். ஆகவே இந்த வகையிலே பிள்ளைகளுக்கு அடிப்பது கட்டாயமாகத் தவிர்க்கப்படுதல் அவசியம்.

ஆகவே அடிப்பது குற்றமல்ல. அது பிள்ளையை நன்னடத்தைப்படுத்துவதற்கு என்ற குறிக்கோளுடன் செயற்பட்டால், அது அங்கீகரிக்கப்படும்.

## பொய்ப்பற்கள்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றை உபயோகிப்பவர்கள் இவற்றை (குறுகியகாலங்களுக்கு மாத்திரம்) தற்காலிகமாகவே உபயோகிப்பது நல்லது. வசதி கிடைத்ததும் (Cast partial denture) உலோகத்தால் வார்க்கப்பட்டு உருவாக்கப்படும் பிறேம் உடைய பற்களைப் பெறுவது விரும்பத்தக்கதாகும். இவை விலை கூடியவை. எனினும் பிளாஸ்டிக் பற்களால் கஷ்டப்படுபவர்கள் பற்களைப் போடாது விடுவதை விட இந்த உலோகத்தால் செய்யப்படும் பற்களைப் பெறுவது நல்லது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உங்கள் வசதி கருதி இரண்டு இடங்களில் சேவை


இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கனடாவிலும்
மொத்தம் இருபது ஆண்டுகளுக்கு மேல் பல் வைத்திய சிகிச்சையில்
அனுபவம் பெற்ற உங்கள் நம்பிக்கைக்குரிய

# டாக்டர். அ. சண்முகவடிவேல்

குடும்ப பல் வைத்தியர்

# Dr. A. Shanmugavadivel

Family Dentist



**செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்**
2466 Eglinton Avenue East, Unit: 7,
Scarborough, Ont. M1K 5J8
Opposite Kennedy Subway Rainbow Village கட்டடத்தில் )

## (416) 266-5161

**திங்கள், புதன் கிழமைகளில்**
Main Square Dental Centre
2575 Danforth Avenue, Toronto
Ontario. M4C 1L5

## (416) 690-0176



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இவ்வருடம் பொலிஸார் உஷார்!

தமிழ் இளைஞர்கள் பங்குபற்றும் பல்வேறு கைகலப்புகள், பயமுறுத்தல் சம்பவங்கள், ஆயுதங்களுடனான நடமாட்டம், துப்பாக்கிச் சூடுகள் தொடர்பான முறைப்பாடுகள் அண்மைய நாட்களில் பொலிஸாருக்குக் கிடைத்துவருகின்றன. கடந்த வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் தமிழ் மக்கள் இவ்விடயங்கள் தொடர்பான விபரங்களைத் தருவதில் தாமாகவே முன்வந்துள்ளதாகவும், மக்களின் இவ்வகையான ஒத்துழைப்பு சந்தேகத்துக்குரியவர்களைக் கண்டுபிடிக்க உதவுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சச்சரவுகளை உருவாக்கும் இளைஞர்கள் குழுக்களாக நிற்கும் அல்லது நடமாடும் இடங்கள் ஏற்கனவே பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பயன்படுத்தப்படும் சில முக்கியமான வாகனங்களின் இலக்கங்களையும், சம்பந்தப்பட்ட நபர்களின் முழுப் பெயர்களையும் பொலிஸார் கிரமமாகப் பெற்று வருகின்றனர். பல பெற்றோர் இவ்விடயத்தில் பொலிஸாருக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

மாணவர், இளைஞர், யுவதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைக் கையாளவென ஒவ்வொரு பொலிஸ் பகுதியிலும் சில அதிகாரிகள் தெரிந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொரு பாடசாலையாகச் சென்று சிலரது விபரங்களைப் பெற்று ஆவணமாக்கியுள்ளனர். அத்துடன் இளைஞர்கள் அதிகமாகக் கூடும் இடங்கள் பற்றிய விபரங்களையும் சேகரித்துள்ளனர்.

கடந்த மாதம் தமிழ் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று ஸ்காபரோ-நோர்த் யோர்க் பகுதியில் இடம்பெற்றது. இரு தமிழ்க் குழுக்களுக்கிடையிலான ஒரு சம்பவம் இது என்று பொலிஸார் தெரிவித்தனர். ஆனாலும், இவ்வருட வசந்த கால, கோடை கால விடுமுறைகள் முன்னைய ஆண்டுகளைப் போன்று 'தேனிலவுக் காலமாக' இவர்களுக்கு இருக்காது என்று பொலிஸார் உறுதி கூறுகின்றனர். 'குழு'க்களின் உறுப்பினர்கள் ஒவ்வொருவர் பற்றியும் தங்களிடம் போதிய தகவல் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# வாணிப வசந்தம் வர்த்தகக் கண்காட்சி

கனடா இலங்கைத் தமிழர் வர்த்தக சம்மேளனம் வருடாவருடம் நடத்தும் வர்த்தகக் கண்காட்சி இந்த வருடம் 'வாணிப வசந்தம்' என்ற பெயரில் ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி மார்க்கத்திலுள்ள 160 புளொக் ட்ரைவில் அமைந்துள்ள நோர்த் அமெரிக்கன் ஸ்ருடியோவில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் பத்து மணி முதல் பிற்பகல் ஒன்பது மணி வரை இதனை நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது. முழுநாளும் கலை நிகழ்ச்சிகளும், கருத்தரங்குகளும் நடை-பெறவுள்ளன.

வாணிப வசந்தம் கண்காட்சியில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்கள் தற்போது வணிக நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

# சென்.ஜேம்ஸ் நகர சமூக நிலையம் ஜூன் 3ல் திறக்கப்படும்

ரொறன்ரோ சென் ஜேம்ஸ் நகரின் பார்லிமென்ட் - வெலஸ்லி பகுதியில் அமைந்துள்ள றோஸ் அவினியு பாட-சாலையுடன் இணைந்ததாக அமைக்கப்பட்டிருக்கும் சமூக நிலையத்தின் உத்தியோகபூர்வ திறப்பு விழா ஜூன் மாதம் 3ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. ரொறன்ரோ நகர முதல்வர் பாபரா ஹோல் அவர்கள் இதனைத் திறந்து வைப்பார். தமிழ் சிறார்களின் நடனம் உட்பட பல்வேறு இன மக்களின் நடன நிகழ்ச்சியும், ஓவியக் கண்காட்சியும் இங்கு இடம்பெறவுள்ளன.

# றிச்மன்ட்ஹில் முருகனுக்கு கொடியேற்றம் 20ம் திகதி

றிச்மன்ட்ஹில் இந்து ஆலயத்தின் முருகப் பெருமானுக்கான வருடாந்த மகோற்சவம் இந்த மாதம் (ஜூன்) 20ம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகின்றது. அன்றைய தினம் காலை 10:30 மணிக்குக் கொடியேற்றம் நடைபெற்று சுவாமி ஊர்வலம் நடைபெறும். பதினைந்து நாட்கள் உற்சவம் நடைபெறும். தினமும் மாலை உற்சவம் பிற்பகல் 7:00 மணிக்கு ஆரம்பமாகும். தேர்த் திருவிழா ஜூலை மாதம் 3ம் திகதியும், தீர்த்தோற்சவம் 4ம் திகதியும் நடைபெறும். மறுநாள் முருகப பெருமான் திருக்கல்யாணம் நிகழும்.

# ஸ்ரீராமகிருஷ்ண பஜனையும் பகவத்கீதை வகுப்பும்

ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கனடா (தமிழ்) கிளையின் பஜனை நிகழ்ச்சியும், பகவத் கீதை வகுப்பும், இராஜயோக விளக்கங்கள், தியானமுறை ஆலோசனைகள், பயிற்சிகள் என்பனவும் ஒவ்வொரு புதன்கிழமையும் பிற்பகல் ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரை ஸ்காபரோ மார்க்கம் வீதி 272ம் இலக்கக் கட்டடத்தில் நடைபெறுகின்றது. விபரங்களுக்கு (416) 266-9638 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# கியுபெக் சுயாட்சி கருத்து வாக்கெடுப்பு இவ்வருட இறுதிக்குள்

கியுபெக் மாநிலத்துக்குச் சுயாட்சி பெறு வதற்கான மக்கள் கருத்து வாக்கெடுப்பு இவ்வருட இறுதிக்குள் நடைபெறும் என்று கியுபெக் மாநில முதல்வர் பரிசூ தெரிவித் துள்ளார். ஆனால் திட்டவட்டமாக எப்போது நடைபெறும் என்று அவர் தெரி விக்கவில்லை. கியுபெக் மாநில சுயாட் சிக்குப் பல அமெரிக்க அரசியல் தலைவர் கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்திருப்ப தாக அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பியுள்ள கியுபெக் துணை முதல்வர் பெர்னாட் லன்ரே தெரிவித் துள்ளார். கியுபெக் தனிநாடாகும் வேளையில் அமெரிக்காவும் கனடாவும் அதன் நட்பு அயல் நாடுகளாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாகனங்களின் ஆசனப்பட்டிகள் பாதுகாப்பற்றவை என்று புகார்

வடஅமெரிக்காவில் பாவனையில் இருக்கும் வாகனங்களின் ஆசனப்பட்டிகள் பாதுகாப்பற்றவை என்று புகார்கள் கூறப்பட்டுள்ளன. முக்கியமாக, ஜப்பானில் தயாரிக்கப்படும் இந்த ஆசனப் பட்டிகள் வடஅமெரிக்காவின் குளிர், வெப்பம் ஆகியவைகளுக்குத் தாக்குப்பிடிக்க முடியாதவையாக இருப்பதாகவும், இதனால் பல தடவை இயங்க மறுத்து அல்லது அறுந்து போனதால் வாகனசாரிகள் விபத்தில் சிக்க நேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பற்றவையாகக் காணப்படும் ஆசனப் பட்டிகளை மாற்றிக் கொடுக்கச் சம்பந்தப்பட்ட வாகன நிறுவனங்கள் சம்மதித்துள்ளன. எனவே அந்தந்த நிறுவனங்களுடனேயே தொடர்பு கொள்ளுமாறு வாகனச் சொந்தக்காரர்கள் கேட்கப்படுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

534-0011



534-0011

**திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகள் சேவைக்கும், திருமணத்திற்குத் தேவையான அனைத்து தேவைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்**

மண்டபம் - முத்துமணவறை - மண்டப அலங்காரம் - பூமாலை - சடைநாகம் - - தலைப்பாகை - தலைநகை - பூசைப் பொருட்கள் - சைவ உணவு அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வதற்கு எம்மை நாடுங்கள்.

றொறன்ரோ, ஸ்காபரோ நகரங்களில் கார் நிறுத்தும் வசதியுடன் திருமண மண்டப ஒழுங்குகளை நாங்களே செய்து தருகின்றோம்.

இந்துமத குரு, கனடிய திருமண பதிவு அதிகாரி

## சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்

( HINDU PRIEST & REGISTAR) புங்குடுதீவு -10, இலங்கை

243 MARGUERETTA ST.,
TORONTO, ONT. M6H 3S4
T.PHONE: 534-0011

1247 ELLESMERE ROAD
SCARBOROUGH, ONT. M1P 2X8
T.PHONE: 750-7319



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாயி பஜனைகள்

## ஸ்காபரோவில்

ஸ்காபரோ சாயி சமித்தியினரால் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஸ்காபரோ வுபர்ன் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் ஆறு மணி முதல் ஒன்பது மணி வரை சாயி பஜனை நடத்தப்பட்டு வருகின்றது. இந்த (ஜூன்) மாதத்தில் 11ம், 25ம் திகதிகளில் பஜனை நடைபெறும். கல்வி வட்டத்தினரின் வகுப்புகள் பஜனைத் தினங்களில் பிற்பகல் 5:15 மணி முதல் 5:45 மணி வரை நடைபெறும். பாலவிஹாஸ் வகுப்புகள் 5 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை நடைபெறும்.

## சாயி தகவல் தொலைபேசிச் சேவை

ஸ்காபரோ பிரதேச சாயி நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களை வழங்குவதற்காக சாயி தகவல் தொலைபேசிச் சேவையும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 24 மணி நேரமும் இடம்பெறும் இந்தச் சேவையை (416) 288-1322 (இணைப்பு: 121) இலக்கத்தில் கேட்கலாம்.

## வெலஸ்லியில்

றொறன்ரோ சென் ஜேம்ஸ் ரவுண் வெலஸ்லி பகுதியில் அமைந்துள்ள றோஸ் அவினியு பாடசாலை மண்டபத்தில் தற்போது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிற்பகல் ஆறு மணி முதல் எட்டு மணி வரையும் சாயி பஜனை நடைபெறுகின்றது. விபரங்களுக்கு (416) 920-9250 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## மிஸிஸாகாவில்

மிஸிஸாகா சாயி சமித்தியினரால் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை இரவு எட்டு மணி முதல் ஒன்பதரை மணி வரை பஜனையும், தியான வழிபாடும் மிஸிஸாகாவில் 1447 அலக்ஸாண்ட்ரா அவினியுவில் அமைந்துள்ள ஸ்ரீசத்ய சாயி பாபா நிலையத்தில் நடைபெறுகின்றது. சிறுவர்களுக்கு பாலவிகாஷ் சமயபாடப் போதனைகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் Erindal campusல் சபையினரால் நடத்தப்படுகின்றது. விபரங்களுக்கு (905) 274-8886 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## லான்ட்ஸ்ரவுணில்

லான்ட்ஸ்ரவுண் ஸ்ரீ சத்ய சாயி நிலையத்தில் பிரதி வியாழன் மாலை 7:30 மணி தொடக்கம் 8:30 மணி வரை

# சாயி பஜனைகள்

பஜனைகள் நடைபெறும். அதேதினம் மாலை 6:45 மணி முதல் 7:25 வரை கல்வி வட்டமும் பிரதி செவ்வாய்க்கிழமை மாலை ஆறு மணி தொடக்கம் ஏழு மணி வரை பாலவிகாஷ் எனப்படும் சிறுவர் சமய வகுப்பும் நடைபெறும். லான்ட்ஸ்ரவுண் தமிழர் கூட்டுறவு இல்ல 3ம் மாடி மண்டபத்தில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

## டொன்மில்ஸில்

டொன்மில்ஸ் சாயி சமித்தியினரால் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை இரவு 7:30 மணி முதல் இரவு 9:00 மணி வரை பஜனை வழிபாடு, பிளெமிங்டன் பார்க் நூலக மண்டபத்தில் நடைபெறுகின்றது. இங்கு சிறுவர்களுக்கான பாலவிகாஷ் சமய போதனா வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. விபரங்களுக்கு 416-467-6393 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# றிச்மன்ட்ஹில் இந்து ஆலய இந்தமாத உற்சவங்கள்

றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம் திங்கள் முதல் வியாழக்கிழமைகளில் காலையில் எட்டு மணி தொடக்கம் நண்பகல் பன்னிரண்டு மணி வரையும், பிற்பகல் ஆறு மணி முதல் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை எட்டு மணி முதல் இரவு ஒன்பது மணிவரை திறந்திருக்கும். மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் (905) 883-9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

ஆலயத்தின் இந்த மாத (ஜூன்) முக்கிய உற்சவங்களின் விபரங்கள் வருமாறு:

01 வியாழன்: பிள்ளையார் திருவிழா (4ம் நாள்)
11 ஞாயிறு: தேர்த் திருவிழா
12 திங்கள்: தீர்த்தத் திருவிழா
13 செவ்வாய்: பூங்காவனம்
16 வெள்ளி: சரவண உற்சவம்
19 திங்கள்: முருகன் திருவிழா ஆரம்பப் பணிகள்
20 செவ்வாய்: முருகன் கொடியேற்றம்
24 சனி: கிருத்திகை விரதம், சண்முக அர்ச்சனை
30 வெள்ளி: முருகன் திருவிழா 11ம் நாள்.

# தமிழர் தகவல் இதழ்கள் தபால் மூலம் விநியோகம்

தமிழர் தகவலின் இதழ்களை நூற்றுக் கணக்கானவர்கள் மாதாமாதம் தபால் மூலமும் பெற்று வருகின்றனர். விநியோக நிலையங்களுக்குச் சென்று குறிப்பிட்ட திகதிகளில் பெற முடியாதவர்களே தபால் மூலம் பெறுகின்றனர்.

தபால் மூலம் பெற விரும்புவர்கள் தபாற் கட்டணத்துக்கான செலவினைத் தாமே பொறுப்பேற்க வேண்டும். ஆண்டு மலர் உட்பட ஒரு வருடத்துக்கான பன்னிரண்டு இதழ்களைத் தபாலில் பெற பதினைந்து (15) டாலர்கள் செலுத்த வேண்டும். வருடத்தின் எந்த மாதத்திலிருந்தும் தபால் மூலம் பெறுவதை ஆரம்பிக்கலாம்.

இதற்கான காசுக் கட்டளை அல்லது காசோலை TAMILS' INFORMATION என்ற பெயருக்கு எழுதப்பட்டிருக்க வேண்டும். அத்துடன், ஒரு கடதாசியில் உங்கள் பெயர், தபால் முகவரி ஆகியவற்றை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி வைக்க வேண்டும். உங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் தவறாது குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

**முக்கியமான அறிவிப்பு:** தமிழர் தகவலைத் தொடர்ந்து பெறவிரும்புபவர்கள், தாங்கள் முன்னர் அனுப்பிய பணம் எப்போது முடிவடைகின்றது என்பதை நினைவில் வைத்திருந்து, கடைசி மாதத்துக்கு முன்னராக பணம் அனுப்பினால் தொடர்ந்து தகவலைப் பெறமுடியும். தவறும் பட்சத்தில், பன்னிரண்டு இதழ்களுடன் தபால் மூலம் அனுப்பப்படுவது நிறைவுபெறும். தபாற்செலவு முடிவடைவதை நினைவூட்டும் கடிதங்கள் எதுவும் அனுப்பப்பட மாட்டாது என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
Tamils' Information,
P. O. Box: 3,
Station - F,
Toronto, Ontario.
M4Y 3L4.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்டட்

**தமிழர்கள் மனதில் வைத்திருக்க வேண்டிய பெயர்**
**தமிழர்கள் நினைவில் நிலைத்திருக்க வேண்டிய பெயர்**

மரக்கறி வகைகள், கடல் உணவுகள், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும் இலங்கை, இந்திய, கனடிய உணவுப்பொருட்களையும், தோசை, இடியப்பம் ஆகியவைகளையும் நியாயமான விலையில் விற்பனை செய்பவர்கள்.

திருமணங்களுக்குத் தேவையான கூறை, பட்டு வேட்டி, சால்வை, தலைப்பாகை, குத்துவிளக்கு, பூமாலைகள், மணவறை, மண்டப வசதி, விருந்துபசார உணவு வகைகள் ஆகிய அனைத்துக்கும் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## SIVA'S TRADING CO. LTD

**3852 Finch Ave.East, (Kennedy / Finch) Scarborough.**

**Tel: 321-2739**

---

ஓம் ஸ்ரீ சாயிராம்

## JAISAI HERBAL CENTRE

## ஜெய்சாயி மூலிகை மருத்துவ நிலையம்

*எங்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட கீழ்க்கண்ட எண்ணெய்கள் கிடைக்கும்:*

* கூந்தல் வளர்ச்சித் தைலம்
* வாத நோவெண்ணெய்
* கஸ்தூரி கோரோசனை மாத்திரை
* பீனிசத் தைலம்
* முக்கூட்டுக் குளிகை
* கிரந்தி எண்ணெய்,
* கடுக்காய்க் குளிகை
* பொடுகுத் தைலம்
* சருமத் தைலம்
* பேறுகால சரக்குத்தூள்

நாட்பட்ட சகல நோய்களுக்கும் இயற்கைமுறை மருத்துவ ஆலோசனை வழங்கப்படும்.
மகப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு விசேடமான மூலிகை முறைகள் உண்டு.

**கம்பியூட்டர் ஜாதகம்!**

கம்பியூட்டர் முறையில் தமிழில் ஜாதகம் பத்து நிமிடங்களுக்குள், கணித முறையிலோ வாக்கிய முறையிலோ கணித்துக் கொடுக்கப்படும்.

* எண்கணிதம் * ஜோதிடம் * கைரேகை * திருமணப் பொருத்தம் * பெயரிடுதல் * பெயர் மாற்றம் * கிரகதோஷ பரிகாரம் முதலிய பிரச்சனைகளுக்குப் 'பென்டுல' சுழற்சியின் மூலம் துல்லியமான, அச்சொட்டான பலாபலன்கள் ஆராய்ந்து கூறப்படும்.

For Appointment Please call:

10 Sunny Glenway
# 307, Donmills
Ontario. M3C 2Z3

*Director & Counsellor*
**Prof. Dr. (Ms) A. Ganesaal**

**Tel: (416) 467-6393**
**Fax: (416) 467-7270**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நான்காவது பிறந்தநாள் வாழ்த்து!



## செல்வி. அனோஜினி குமாரதாஸன்

ரொறன்ரோ, ஷேபோர்ண் வீதியில் வசிக்கும் குமாரதாஸன் கிரிஜாதேவி (கீதா) தம்பதிகளின் ஏக புத்திரி, அருந்தவச் செல்வி அனோஜினி (அனு) இம்மாதம் 21ம் திகதி தனது நான்காவது பிறந்த நாளை இஷ்ட தெய்வங்களின் ஆசியுடன் மனமகிழ்வாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி அனுவுக்கு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமா, மாமி, சின்னமாமா, சின்னமாமி, தமிழீழத்திலிருக்கும் அப்பாவழியான, அம்மாவழியான பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், அங்கிள்மார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர்கள், குடும்ப நண்பர்கள் அனைவரும் தங்களின் இதயபூர்வமான பிறந்த நாள் வாழ்த்தினைத் தெரிவிக்கின்றனர்.

**செல்வி. அனோஜினியின்**
**தாய்நாடான**
**யாழ்ப்பாணத்தின் சிறப்பு**

ஆழ நீர்க்கடல் சூழு மிலங்கைக்
கனியெ னுந்தமிழ் மக்கள் வசித்திடும்
யாழி சைத்தொரு பாணன் பரிசிலாய்
அன்று பெற்றநல் யாழ்ப்பாண நாட்டினில்
வாழை மாபலா மாதுமை தோடைகள்
வான்க ரும்பொடு தெங்கு பொலிந்துமே
ஏழ மைதனைப் போக்கி மிளிர்ந்திடும்
இந்நி லத்தினில் இல்லாமை இல்லையே!

- கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை

வாழ்க தமிழ்!
வெல்க தமிழீழம்!

# 'முதல் நன்மை' பெற்ற சகோதரச் சிறுமிகள்



ரொறன்ரோ, ஷேபோர்ண் வீதி 545ம் இலக்கக் கட்டடத்தில் வசிக்கும் கிறிஸ்ரி சிவா தம்பதிகளின் புதல்விகளான மேரி நர்மதா, மேரி மக்டெலின் ஆகிய இருவரும் சென் ஜேம்ஸ் நகர சென். லூட்ஸ் தேவமாதா ஆலயத்தில் 'முதல் நன்மை' பெற்றுக்கொண்டனர். சகோதரச் சிறுமிகள் இருவரும் இவ்வாலயத்தின் பிரதம குருவானவருடன் மேற்படி வைபவத்தின் பின்னர் எடுத்துக்கொண்ட படம் இது. இந்த ஆலயத்தில் மாதம் தோறும் வரும் முதல் சனிக்கிழமைகளில் தமிழில் ஆராதனை பல வருடங்களாக நடைபெற்று வருகின்றது.

## குழந்தைகளின் பாதுகாப்புக்கு...

(30ம் பக்கத் தொடர்ச்சி)

வேறெவருடனும் வாகனத்தில் செல்ல வேண்டாம். வேறெவரின் வாகனத்திலும் ஏறவும் வேண்டாம்.

* செல்லப் பிராணியைப் பார்ப்பதற்கும் சரி, தேடிப்பிடிப்பதற்கும் சரி, உங்கள் அம்மா அல்லது அப்பா பிரச்சனையில் மாட்டுப்பட்டிருப்பதாகக் கூறினாலும் சரி தங்களுடன் வருமாறு எவராவது உங்களை அழைத்தால் அவர்களுடன் செல்ல வேண்டாம்.

* உங்கள் பெற்றோரை எங்காவது ஒரு கடைப் பகுதியில் தவற விட்டுவிட்டால் அங்குமிங்கும் தேடி அலைய வேண்டாம். உடனடியாகப் பாதுகாவலரிடம் அல்லது கண்டுபிடிப்பவர்கள் பகுதிக்குச் சென்று முறையிடவும்.

இங்கு தெரிவிக்கப்பட்ட தகவல்கள் மேலோட்டமானவை என்பதைக் கவனத்தில் இருத்திக் கொள்ளவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Common sense helps keep kids from strangers

Here are some tips for parents to follow to help 'streetproof' their children.

* Tell your kids never to go anywhere with a stranger, not to talk to strangers and never take anything from them.
*Teach your child a 'code' word that will be used by anyone other than the parents who come to pick the child up. Unless that persons know the cord word, tell the child to stay away from them.
* Never let a child to go to a public washroom unattended.
* Teach kids where and how to get help.
* Don't teach kids through scare tactics.
* Encourage kids to take some responsibility for their well-being.
* Develop a "what if" games for the kids to get them thinking of how they would respond if they felt threatened or afraid.
*Make the kids understand 'goodness" and "badness" are not visible traits.
*Check babysitter's credentials thoroughly.

There are lots of ways kids can help look after themselves. Here are some:
* Let your [parents know the route you take to school.
* Ensure you always know how to reach your parents.
* Checkout the neighbourhood with your parents and have them show you where the Block Parent homes are.
* Learn how to use a pay phone and how to phone home collect.
* Be alert to anyone taking undue interests in you.
* You don't have to go near a car to talk to the people inside it.
* Never get into a car or go with someone unless your parents approve.
* No one should be asking for help looking for "A lost puppy" or telling you your mother or father is in trouble and that he or she will take you to them.
* If you lose your parents in a mall, go to a checkout, security office, or lost and found and tell someone you're lost - never just wander around.

# குழந்தைகளின் பாதுகாப்புக்கு வழி என்ன? பெற்றார்களுக்குச் சில துப்புகள்!

கனடாவில் குழந்தைகள், சிறார்கள் கடத்திச் செல்லப்படுவது அதிகரித்து வருகின்றது. கடத்தப்படும் காரணம் முற்றுமுழுதாகப் பாலியல் நோக்கமற்றதாயினும், கடத்தலால் பிள்ளைகளின் உயிர் பறிக்கப்படுகின்றது. இதனால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளது நடமாட்டத்தில் அதீத கவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகும்.

கனடாவில் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 25ம் திகதி காணாமல் போன குழந்தைகளின் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இந்த நாளில் வேதனையுடன் ஒன்றுகூடும் பெற்றோரைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறான நிலை புதிதாக எவருக்கும் ஏற்படக்கூடாதாயின், பிள்ளைகள் நடமாட்டத்தையிட்டு பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பான சில தகவல்கள் இங்கே தரப்படுகின்றன. வீதிகளில் ஒவ்வொரு பிள்ளையும் பாதுகாப்பாக நடமாட வேண்டும் என்பதே ஒவ்வொருவரதும் விருப்பமாகும்.

**தொகுப்பு: றஞ்சி**

எனவே பின்வரும் விடயங்களை அவதானத்தில் எடுப்பது நல்லது.

* முன்பின் தெரியாத ஒரு அந்நியருடன் சேர்ந்து போகவேண்டாம் என்றும், அவர்களுடன் பேசவேண்டாம் என்றும் உங்கள் பிள்ளைகளிடம் சொல்லி வையுங்கள். அப்படியானவர்கள் ஏதாவது கொடுத்தால் அதனை வாங்க வேண்டாம் என்றும் கூறிவையுங்கள்.

* உங்கள் பிள்ளைக்கு மட்டுமென்று ஒரு 'சூசக வார்த்தை'யைச் சொல்லிக் கொடுங்கள். நீங்கள் அல்லாத வேறு ஒருவர் உங்கள் பிள்ளையை அழைத்துச் செல்லச் செல்லுமிடத்து அந்த ஆள் குறிப்பிட்ட 'சூசக வார்த்தை'யைப் பாவித்தால் மட்டும் அவருடன் செல்லுமாறு சொல்லி வைக்கவும். அல்லது அவரிடமிருந்து விலகி நடக்க வேண்டும்.

* உதவிக்கு ஒருவர் இல்லாமல், தனியாக ஒருபோதும் உங்கள் பிள்ளையை பொது மலசல கூடத்துக்குள் செல்ல அனுமதிக்க வேண்டாம்.

* எங்கே, எவ்வாறு உதவி பெறலாம் என்பதைப் பிள்ளைக்குக் கற்றுக் கொடுங்கள்.

* பிள்ளைகளுக்குப் பயமூட்டும் வகையில் எதனையும் போதிக்க வேண்டாம்.

* பிள்ளைகள் தங்களது சொந்த நலனில் அக்கறை காட்டக்கூடியவர்களாக வாழும் வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

* ஒரு பிள்ளை பயமுறுத்தப்படும் வேளையில், அல்லது அவர் பயமடையும் சந்தர்ப்பத்தில் 'நான் இந்த வேளையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்' என்பது பற்றி விளையாட்டு உத்திகளின் ஊடாகப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும்.

* நல்லது எது கெட்டது எது என்பதைப் புறத்தோற்றத்தால் கண்டு பிடிக்க முடியாது என்பதைப் பிள்ளைகளுக்குப் புரியும் வகையில் தெரியப்படுத்த வேண்டும்.

* குழந்தை பராமரிப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு முன்னர் அவர்களது நேர்மை, கடந்தகால வரலாறு ஆகியன பற்றிச் சரியாக விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

குழந்தைகள் தங்களது பாதுகாப்பைத் தாங்களே கவனிப்பதற்குப் பலவழிகள் உண்டு. அவற்றுள் சில இதோ:

* நீங்கள் பாடசாலைக்குச் சென்று வரும் பாதையை உங்களது பெற்றோருக்குச் சொல்லி வையுங்கள்.

* ஒவ்வொரு பிள்ளையும் தங்களது பெற்றோருடன் எவ்வாறு தொடர்பு கொள்ளலாம் என்பதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

* உங்கள் பெற்றோரின் உதவியுடன் அயலவர்கள் பற்றியும், உங்கள் பகுதிக்கான கூட்டுப் பெற்றார் நிலையம் பற்றியும் தெரிந்து வைத்திருங்கள்.

* பொதுத் தொலைபேசி நிலையங்களில் எவ்வாறு தொலைபேசியைப் பாவிப்பது என்பது பற்றியும், பணம் செலுத்தாது எவ்வாறு தொலைபேசி மூலம் வீட்டுடன் தொடர்பு கொள்வது (collect call) என்பது பற்றியும் தெரிந்து வைத்திருங்கள்.

* உங்கள் மீது கூடிய சிரத்தை காட்டும் நபர் பற்றி ஜாக்கிரதையாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

* வாகனமொன்றுக்குள் இருக்கும் ஒருவருடன் கதைப்பதற்கு வாகனத்துக்கு மிக அருகாமைக்கு நீங்கள் செல்ல வேண்டியதில்லை.

* உங்கள் பெற்றோரின் அனுமதியின்றி
(29ம் பக்கம் பார்க்க)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# கனடாவில் உங்கள் நிதி செழிக்க...

நாடுங்கள்



## யோகி தம்பிராஜா F.C.M.A.

நிதி நிபுணர், ஆலோசகர்

- வளர்ச்சி நிதிகள் (Mutual Funds)
- வரி தவிர்க்கும் திட்டங்கள் (RRSP)
- குழந்தைக் கல்வி / சேமிப்புத் திட்டங்கள்
- இளையோர் நிரந்தர ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்
- முதியோர் மன ஆறுதல் திட்டங்கள்

இலவச ஆலோசனைகளுக்கு
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

**(416) 412-4267**

24 Hours / 7 Days a Week

FORTUNE FINANCIAL




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓம்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும் கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்** (ஜயபாமணி) (புங்குடுதீவு -10)

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
மற்றும்



சடைநாகம், தலை நகை செற்
முத்து மணவறை
லைப்பாகை
தல் அலங்காரம்
பூஜைப் பொருட்கள்
ஆலய வைபவங்களுக்கான
முத்துச் சப்பரம்

280 Wellesley Street East
Suite 2407
Toronto, Ontario
Canada
M4X 1G7

**ஆகியவைகளுக்கு என்றும் எப்பொழுதும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

## Tel: (416) 266-3333

628 E, Birchmount Road, Scarborough, Ontario. M1K 1P9

ஒன்ராறியோ வர்த்தக
சம்மேளனத்தின் சிறந்த
சேவைக்கான
விருது பெற்ற
நிறுவனம்

ஏசியன் கிறிக்கெட் கிளப்பினரின்
சிறந்த வர்த்தக
நிறுவனத்துக்கான
விருது பெற்ற
நிறுவனம்

# ஸ்ரீ சிவா ஜுவலறி

## SRISIVA JEWELLERY

721 Bloor St. W., Toronto, Ontario. M6G 1L5

## (416) 531-4867

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்